கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௪] ஈசுவர௵ சித்திரை மீ [பகுதி-௬.

Vol. 34. *April — May 1937.* No. 6.

உள்ளுறை.

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். ௧௭௭—௧௮௪

யவனர்வரலாறு:—ஸ்ரீமத். த. இராமநாதபிள்ளை B.A. (Lond) ௧௮௫—௧௯௨

பூனையும் பூசையும்:—சுவாமி ஞானப்பிரகாசர், நல்லூர். ௧௯௩—௧௯௯

ஓர் அநுதாபக் குறிப்பு:— ஸ்ரீமத். கோ. வா. சாரங்கபாணி ராமாநுஜதாசர். ௨௦௦

மதிப்புரை:— ௨௦௧—௨௦௨

மத்யம வியாயோகம்:— முகவுரை முதலியன.- ஸ்ரீமத். V. S ராமஸ்வாமி சாஸ்திரியார் B.A, B.L. 17—27, 1—3

குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார். 393—400

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

...க்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

...சிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1937.

...MUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and ...RAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, ...o. 54, New Jail Road, Madura.

5
35
1
21507

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*7.	தோத்திரத்திரட்டு			
*8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
*	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
*9.	அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

---

11 APR 1937

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௪] ஈசுவரஹு சித்திரைமீ [பகுதி-௬.

Vol. 34. April — May 1937. No. 6.

நியாயப்பிரவேச மணிமேகலை.

(௩௬௪—ஆம் பக்கத்தொடர்ச்சி)

கீழ்ச்சொல்லப்பட்ட அனுமானநிரூபணத்தின் முடிப்புரை கூறுகிறார்,—

'இவ்வகை யேதுப் பொருள்சா திப்பன' (அ௫)

என்று.

இதன்பொருள்: கீழே சொல்லப்பட்ட காரிய காரண சாமானிய ரூபமான ஏதுக்கள், பக்ஷ ஸபக்ஷங்களில் உள்ளனவாயும், விபக்ஷங்களில் இல்லனவாயும் அன்னுவயவியாப்தியேனும் அநன்னுவயவியாப்தியேனும் உடையனவாய்த் தத்தம் துணிபொருளைச் சாதிப்பனவாம் என்றவாறு.

இவ்வகை சாதிப்பன என இயையும்; இவ்வகை என்பதை ஏதுவுக்கு அடையாக்கி உரையிற்சொல்லிய விசேடணங்களை வகைப்பொருளவாக்கியுரைப்பினும் அமையும்.

ஈண்டுப் பொருள் என்றது துணிபொருளை. சாதித்தல்-சித்திபெறச்செய்தல். சாதிப்பன எனக் கருவி கருத்தாவாக உபசரிக்கப்பட்டது.

இங்ஙனம் பிழையாத நல்லனுமானங்களாமாறு கூறிமுடிக்கப்பட்டது.

இனி அவை பிழைக்குமாறுகாட்டுவார் காரியாத் காரணம் அனுமேயம் என்பதுபற்றிக் காரியமாத்திரமே ஏதுவாய்நின்று அன்னுவயத்தாலேனும் வெதிரேகத்தாலேனும் துணிபொருளைச் சாதிக்கும் எனக்கொள்ளின் அது பிழைபடுமெனத் தடைவிடைகொண்டு நிரூபிக்கத்தொடங்கி, முதலில் காரியமாத்திரம் ஏதுவாதல் சாலாதென்கின்றார். அது வருமாறு:—

'என்னைகா ரியம்புகை சாதித்த தென்னில்
புகையுள விடத்து நெருப்புண் டென்னும்
அன்னுவயத் தாலும் நெருப்பில்லா விடத்துப்
புகையில்லை யென்னும் வெதிரேகத் தாலும்
புகை நெருப்பைச் சாதித்த தென்னில்
நேரிய புகையில் நிகழ்ந்துண் டான
ஊர்த்தச் சாமம் கௌடிலச் சாமம்
வாய்த்த நெருப்பின்வரு காரிய மாதலால்
மேல்நோக் கிக்கருத் திருப்பபகைத் திருப்ப
தாமே நெருப்பைச் சாதிக்க வேண்டும்'. (அசு-கூ௫)

என்பது.

இதன்பொருள்: துணிபொருளின்காரியமாகிய புகை ஏதுவாய் நின்று தன் காரணமாகிய நெருப்புள்ளதென்று சாதித்ததெங்ஙனமெனில்; அப்புகையுள்ளவிடத்தில் நெருப்புண்டு என்னும் உடன்பாட்டுடனிகழ்ச்சியாலேனும், நெருப்பில்லாவிடத்துப் புகையில்லை என்னும் எதிர்மறையுடனிகழ்ச்சியாலேனும் புகை, நெருப்புண்டெனத் துணிவுறச்செய்தது என்பாயாயின், நெருப்பின் காரியமென்று இசைந்துகொள்ளப்பட்ட புகை தோன்றும்பொழுதே அப்புகையினுடனிகழ்ந்துதோன்றிய மேல்நோக்கியெழுந்த கருநிறம் அல்லது வளைந்து பக்கநோக்கிச்செல்லும் கருநிறம் என்னும் இந்நிறங்களும் தப்பாத நெருப்பினின்று அப்புகையுடன்தோன்றிய காரியமாதலின் அங்ஙனம் மேல்நோக்கிக் கருத்திருப்பனவும் அதனின் மாறுபடக் குறுக்கிட்டுக் கருத்துத்தோன்றுவனவுமாகிய சித்திரப்படவருணங்களுமே நெருப்புண்டென்று துணிதற்குச் சாதனமாகவேண்டுமன்றே? அங்ஙனமின்மையால் காரியப்பொருள் மாத்திரமே தன் காரணமாகிய துணிபொருளுண்டென்று துணிதற்குச் சாதனமாகமாட்டாதென்றவாறு.

முதலடியை, காரியம் புகை சாதித்ததென்னையெனில் எனக் கூட்டுக.

இதனுள், காரியம் புகை சாதித்தது என்னை என்றது வினாமுந்துறுத விடையில்லை என்பதுபற்றி எதிரிகூறும் விடைக்கேற்ற வினாவைக் கொண்டுகூறிக்கொண்டவாறு. காரியம், புகை என்பன பெயரடுக்கு.

எனின் என்பன கொண்டுகூறற்குறிப்புணாநின்றன.

புகையுள்ளவிடத்து நெருப்புண்டென்னும் அன்னுவயத்தாலும் நெருப்பில்லாவிடத்துப் புகையில்லை என்னும் வெதிரேகத்தாலும் புகை நெருப்பைச் சாதித்தது என்பது, காரியம் புகை சாதித்ததென்னை எனக் கொண்டுகூறிக்கொண்ட வினாவுக்கு விடையாயிற்று.

பின்னும் எனின் என்றது அவ் விடையை மறுத்தற்குக் கொண்டுகூறிக்கொண்டமைதோன்றநின்றது.

புகையுள்ளவிடத்து நெருப்புண்டு என்றது அன்னுவயம் (உடன்பாட்டுடனிகழ்ச்சி) இருக்கும்படி காட்டியவாறு.

என்னும் என்றது அன்னுவயத்தின் அபேதமுணாநின்றது.

நெருப்பில்லாவிடத்துப் புகையில்லை என்றது வெதிரேகம் (எதிர்மறையுடனிகழ்ச்சி) இருக்கும்படி காட்டியவாறு.

பின்னும் என்னும் என்றது வெதிரேகத்தின் அபேதமுணாநின்றது.

ஆல் இரண்டும் உடனிகழ்ச்சிகுறித்துநின்றன.

எண்ணும்மைகளிரண்டும் விகற்பப்பொருளுணாநின்றன.

அன்னுவயத்தாலேனும் வெதிரேகத்தாலேனும் என்பவற்றின் ஏன் என்னும் இடைச்சொல் செய்யுள்விகாரத்தால் தொக்கமையால் உம்மைகளிரண்டும் விகற்பப்பொருளவாயின.

புகை நெருப்பைச் சாதித்தது எனக் கருவி கருத்தாவாக உபசரிக்கப்பட்டது.

இத்துணையும் எதிரிகூற்று. இது எனின்(2) என்றதனால் கொண்டுகூறப்பட்டது.

இனி இதனை மறுக்கத்தொடங்கி முதலில் காரியப்பொருள் மாத்திரம் தனியேநின்று துணிபொருள்சாதிக்கமாட்டாதென்று காட்டுகிறார்—

'நேரிய புகையில் நிகழ்ந்துண் டான
ஊர்த்தச் சாமம் கேளடிலச் சாமம்
வாய்த்த நெருப்பின்வரு காரிய மாதலால்
மேனோக் கிக்கருத் திருப்பபகைத் திருப்ப
தாமே நெருப்பைச் சாதிக்க வேண்டும்'

என்று.

புகையில் நிகழ்ந்து உண்டான—புகையினுடனிகழ்ந்து தோன்றிய.

ஊர்த்தச்சாமம் என்பது ஊர்த்வ-ஶ்யாமம் என்னும் வடமொழிச் சிதைவு. இதன்பொருள்: மேலெழுந்ததாய்த் தோன்றும் கருநிறம் என்பது.

நெருப்பினின்றும் புகைதோன்றும்பொழுதே அப்புகையுடன் கூடி அதன் நிறமும் தோன்றும் என்னும் கொள்கையை உட்கொண்டு அந்நிறங்களை நெருப்பின்வருகாரியம் என்றார். நியாய நூலார் இங்ஙனங்கொள்ளாது 'நெருப்பின் காரியமாகப் புகை தோன்றும்; புகைதோன்றிய பிற்கணத்தில் புகையின்காரியமாகப் புகைநிறம் தோன்றும்' என்பர். இது கொள்கைவேறுபாடு.

இத்தடைவிடைகளால், புகையைக்காட்டும் சித்திரப்படங்களில் அப்புகைநிறம் காணப்படுதலால் அந்நிறத்தின்சாதி நெருப்பின் காரியமான புகைநிறத்தின்சாதியாயிருத்தலால் அப் புகை நிறமுள்ள படங்களில் நெருப்புண்டென்று துணிதற்கு அப் புகை நிறம் சாதனமாதல்வேண்டுமே. அங்ஙனமின்மையால், அடுக்களையிற்காணும் நெருப்பின்காரியமாகிய புகையின்சாதி மலையிற் காணும் புகையின்சாதியாயிருத்தல்கொண்டு மலையில் நெருப்புண்டென்று துணிதலும் கூடாதென்பது இதனால் அறியத்தக்கது. ஒருகாரணத்துக்குப் பல காரியங்களும் ஒருகாரியத்துக்குப் பல காரணங்களும் இருக்கக்கூடுமாதலால், ஏதேனுமொருகாரியத்தைக் கொண்டு வேறேதேனுமொருகாரணத்தைத் துணிதலும், ஏதேனு

மொருகாரணத்தைக்கொண்டு வேறேதேனுமொரு காரியத்தைத் துணிதலும் பிறழ்ச்சியடையக்கூடும் என்பதுபற்றிக் காரியப் பொருளைமாத்திரம் தனியே ஏதுவாகக்கொண்டு துணிபொருள் துணிதல் சாலாதென்பதாம். காரியம் உபலக்ஷணமாதலால் காரண சாமானிய ஏதுக்களும் தனியே சாலாவென்பதாயிற்று.

இனி, ஏதுப்பொருளுக்கும் துணிபொருளுக்குமுள்ள அன்னுவயமாத்திரமும் துணிபொருள்சாதித்தற்கு உதவியாகமாட்டாதென்று காட்டுகிறார். அது வருமாறு:—

'அன்னு வயஞ்சா திக்கின் முன்னும்
கழுதை யையும் கணிகை யையும்
தம்மி லொருகா லத்தோ ரிடத்தே
அன்னு வயங்கண் டான்பிற் காலத்துக்
கழுதையைக் கண்ட விடத்தே கணிகையை
அனுமிக்க வேண்டு மதுகூடா' (௯௬-௧௦௧)

என்பது.

இதன்பொருள்: ஏதுப்பொருளுள்ளவிடத்தில் துணிபொருளும் உண்டு என்னும் அன்னுவயமாகிய உடன்பாட்டுடனிகழ்ச்சியே துணிபொருள்சாதித்தற்குக் கருவியாமென்று சொல்லுவாயாயின், அதுவும் கூடாது; ஏன் எனில் ஏதுவாகக் கருதப்படும் ஒரு கழுதையையும் ஒரு வேசையையும் ஒரு காலவிசேடத்தில் ஓரிடத்தில் அவைதம்மில் அன்னுவயம் (உடன்பாட்டுடனிகழ்ச்சி) உடையனவாகக்கண்ட ஒருவன், அவ்வுடனிகழ்ச்சிகொண்டு மற்றொருகாலத்தில் ஒரு கழுதையைக்கண்டவிடத்தில் கணிகையும் உண்டென்று அனுமானித்தறியவேண்டுமே! அங்ஙனம் அனுமித்தறிதலின்மையால் அன்னுவயம் (-உடன்பாட்டுடனிகழ்ச்சி) மாத்திரமும் அனுமிதியுணர்விற்குச் சாதனமாகாதென்பதாம்.

தம்மில் அன்னுவயம் கண்டான் என இயையும். ஈண்டு அன்னுவயமுடையவை அன்னுவயமெனப்பட்டன; அன்னுவயமுடையனவாகக் கண்டான் என்றபடி.

கூடாது என்பது கூடா என ஈறுதிரிந்துநின்றது.

இனி வெதிரேகமாத்திரமும் துணிபொருள் துணிதற்குச் சாதனமாகாதென்கிறார். அது வருமாறு:—

‘..................................நெருப்
பிலாவிடத் துப்புகை யிலையென நேரத்
திருத்தகு வெதிரேகம் சாதிக்கு மென்னில்
நாய்வா லில்லாக் கழுதையின் பிடரில்
நரிவாலு மிலையாக் காணப் பட்ட
அதனையே கோண்டு பிறிதோ ரிடத்து
நரிவாலி னல்நாய் வாலையனு மித்தல்
அரிதா மதனா லதுவும் ஆகாது’ (௧௦௧—௧௦௪)

என்பது.

இதன்பொருள்: எங்கு நெருப்பில்லையோ அங்குப் புகையில்லை என்னும்படி நேர்மையான அவ்விலக்கணமுடைய ‘வெதிரேகம் (-எதிர்மறையுடனிகழ்ச்சி) மாத்திரமே நெருப்புடைமையாகிய துணிபொருளைச் சாதிக்கும்என்பாயாயின், நாய்வாலில்லாத கழுதை முதுகில் நரிவாலும் இல்லை என்று காணப்பட்ட அவ்வெதிரேகத்தினை (-எதிர்மறையுடனிகழ்ச்சியை) மாத்திரம்கொண்டு பின்பு மற்றோரிடத்து நரிவால் கண்டபொழுது அந்நரிவாலை ஏதுவாகக் கொண்டு நாய்வால் உண்டென்று அனுமித்தறிதல் இன்மையால் வெதிரேகமாத்திரமும் துணிபொருள்துணிதற்குச் சாதனமாகாதென்பதாம்.

நேர் அத்திருத்தகு வேதிரேகம் என்றது நேர்மையான இலக்கணமின்றி விபரீதப்பட்டிருக்கும் அநன்னுவயானுமான வெதிரேகமும் தனியேநின்று துணிபொருள்சாதிக்கமாட்டாதென்பது சொல்லவேண்டாம் என்பதுபட நின்றது.

அதனையே கோண்டு என்னும் பிரிநிலையேகாரத்தால் காரியம் அன்னுவயம் வெதிரேகம் மூன்றும் கூடியே துணிபொருள் சாதிக்கும் சாதனமாம் என்பது குறிப்பாயிற்று. இக்குறிப்புக்கொண்டே முன் காரியமாத்திரம் சாதனமாய்நின்று துணிபொருள்சாதிக்கமாட்டாதென்றும், அன்னுவயமாத்திரமும் சாதனமாய்நின்று துணிபொருள்சாதிக்கமாட்டாதென்றும் பொருளுரைக்கப்பட்டது.

இங்ஙனம் காரியான்னுவயவெதிரேகங்கள் தனித்தனி சாதனமாகமாட்டா எனவே அவை மூன்றும் கூடியே சாதனமாம் என்பது பெறப்பட்டது.

ஈண்டுக் காரிய ஏதுவைக் கூறியது உபலக்ஷணமாதலால் காரண சாமானிய ஏதுக்களும் தனியேநின்று துணிபொருள் சாதிக்கமாட்டா வென்பது கருத்தாகக்கொள்க.

இங்ஙனம் காரிய காரண சாமானியான்னுவயவெதிரேகங்களுள் ஏதேனும் ஒன்று தனித்துநின்று துணிபொருள்சாதிக்கமாட்டாதென்று நிரூபித்து, இனி நல்லனுமானத்துக்கு இன்றியமையாத உறுப்புக்கள் இவை என்பார் முதலில் வேண்டாவுறுப்புக்கள் இவை எனக் காட்டுகிறார்,—

‘ஒட்டிய வுபநய நிகமன மிரண்டுந்
திட்டாந் தத்தி லேசென் றடங்கும்’ (௧௦௯—௧௧௦)

என்று.

இதன்பொருள்: ஐவகையுறுப்புக்களுள் திட்டாந்தவுறுப்பை ஒட்டிக்கூறப்படும் உபநயமென்னும் உறுப்பின்பொருளும் நிகமனமென்னும் உறுப்பின்பொருளும் திட்டாந்தமென்னும் உறுப்பின் பொருளாற் பெறப்படுதலால் அவை இரண்டும் வேண்டா என்பதாம்.

உபநயம் நிகமனம் திட்டாந்தம் என்னும் உறுப்பின் பெயர்கள் அவற்றின் பொருளுணர நின்றன.

திட்டாந்தத்திலே சென்றடங்கலாவது திட்டாந்தவுறுப்பிலுள்ள உவமவாசகத்தால் பெறப்படுதல். ஆதலால் அவ்வுறுப்புக்களிரண்டும் வேண்டாவென்பது குறிப்பெச்சம்.

இதனால் நல்லனுமானத்துக்குப் பக்கம் ஏது திட்டாந்தம் என்னும் மூன்றுறுப்புக்களே சாலும் என்பதாயிற்று. (இது பிறர் தம்மதம் மேற்கொண்டு களைந்தவாறு.)

இனி அம்மூன்றுறுப்புக்களும் நல்லனவும் தீயனவும் ஆமாறு காட்டத்தொடங்கி முதலில் அவற்றைப் பகுத்துக்காட்டுகிறார்,—

'பக்கம் ஏதுத் திட்டாங் தங்கள்
ஒக்க நல்லவும் தீயவும் உள' (௧௧௧-௧௧௨)

என்று.

இதன்பொருள்: பக்கமுதலிய மூன்றுறுப்புக்களும் முற்றும் நல்லனவாதலால் நல்லனுமானமாதலும், அவற்றுள் ஒரோவொன்று தீயனவாதலானே அனுமானாபாசமாதலும் உள்ளனவாம் என்றவாறு.

நல்லனவாதற்கு ஒக்கவென்றதனால் தீயனவாதற்கு ஒரோவொன்றே சாலுமென்பதாயிற்று.

நல்லவும் தீயவுமாகிய இருவகைப்பகுப்பினுள் நல்லவை இவை என்பார் முதலில் நற்பக்கவுறுப்பின் இலக்கணங் கூறுகின்றார்,—

'வெளிப்பட் டுள்ள தன்மி யினையும்
வெளிப்பட் டுள்ள சாத்தியதன் மத்திறம்
பிறிதின் வேறும் வேறுபாட் டினையும்
தன்கட் சார்த்திய நயந்தருத லுடையது
நன்கேன் பக்கமேன நாட்டுக' (௧௧௩-௧௧௭)

என்று.

இதன்பொருளும் இதன்பின்வருபவற்றின் பொருளும் செந்தமிழ்த்தொகுதி ௩௨. பகுதி ௨-ல் இருபத்தொன்பதாம்பக்கம் தொடங்கி ஒவ்வொரு பகுதியிலும் சிறிதுசிறிதாக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை ஆங்காங்குக் காண்க

இவ்வாராய்ச்சியை ஆதியோடந்தம் முழுதும் கண்ணுற்று நியாயப்பிரவேசத்துக்கும் மணிமேகலைக்குமுள்ள வேறுபாடுகளையெல்லாம் நோக்குவார்க்கு மணிமேகலை நியாயப்பிரவேசத்தின் வழிவந்ததில்லையென்பது நன்கு புலனாகும்.

நியாயப்பிரவேச மணிமேகலை முற்றும்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை: B.A. (Lond) அவர்கள் எழுதுவது.]

யவனர், யூதர், உரோமர் என்னும் முச்சாதியாரின் நாகரிகங்களின் பயனைத்துய்த்தே மேனாட்டார் யாவரும் சீர்திருந்தினரெனப் பண்டைச்சரித்திரவல்லோர் யாவரும் பகர்கின்றனர். ஐரோப்பியருடைய அரசியற்பிரமாணங்கள் உரோமருடைய நூல்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவையெனவும் அவரது சமயமாகிய கிறித்துசமயம் யூதசமயத்தின் வழித்தோன்றியதெனவும் அவருடைய இலக்கியங்களும் கலைகளும் யவனநூல்களைப் படித்தே எழுதப்பட்டவையெனவும் வரலாற்றாசிரியர்கள் உரைக்கின்றனர். உரோமர் தம் அடிமைகளாகிய யவனரிடம் வித்தைகளைப்பயின்று மேனாட்டுலகிற்கு உதவினர். யவனருடைய பாடல்களுக்கு நிகராக இக்காலத்து மேனாட்டுப்புலவர்கள் புனைந்தாலும் அவர்களுடைய சிற்பச்சிலைகளைப்போல இக்காலத்தவரால் அமைக்க இயலாது. இக்காலத்துப் புலவர்களும் ஓவியரும் சிற்பிகளும் நாடகவாசிரியரும் சரித்திரநூலோரும் தத்துவஞானிகளும் யவனருடைய கலைத்திறனை வியக்கின்றனர். இக்காலக்கலையாராய்ச்சிக்கு யவனருடைய கலையாராய்ச்சி சிறிதும் நிகராகாதெனினும், யவனரே முதன்முதல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர். யவனர் அறஞ்செய்தலினும் பொருளீட்டுவதிலும் இன்பம்நுகர்தலிலும் வீட்டிலக்கணம் ஆராய்தலிலும் தம்மில் மிக்காரின்றிச் சிறந்தனராகிப் பிறசாதியாரின் நன்மதிப்பையும் பெற்று வாழ்ந்தனர். உரோமர் யவனதேசத்தை அடிமைநாடாக்கி ஆண்டபோதிலும் யவனருடைய நாகரிகம் உரோமருடைய மனதைக் கவர்ந்தது. யவனருடைய நாகரிகம் உரோமரால் பரக்கப்பட்டு உலகெங்கும் பரவிற்று. இத்தகைய யவனருடைய அரசு நிலைகுலைந்ததற்குக் காரணம் ஒற்றுமையின்மையே. யவன நகர்கள் ஒவ்வொன்றும் தம் சுவாதீனத்தை இழப்பதிலும், சிற்றரசாக இருக்க விரும்பின. அந்நகர்களுள் ஏதென்ஸ் நகரே மிகப் புகழ்பெற்றது. ஸ்பாட்டாநகர் போரில் முதன்மை

பெற்றிருந்தது. யவனர் தேசியம் என்பதை உணர்ந்திலர். யவன மொழியில் தேசீயமும் நகர்வாழ்க்கையும் ஒருபொருட்கிளவியாக எண்ணப்பட்டன. நகர்ப்பெயர்விகுதியாகும் போலீஸ் என்னும் யவனமொழிக்கு இவ் விருகருத்துக்களும் உண்டு. யவனர் ஒரு முறைமாத்திரம் ஒன்றுசேர்ந்து தம்மைப் பிறதேசத்தவர் கீழ்ப் படுத்தாது காத்துக்கொண்டனர். அங்ஙனம் இரண்டு தம்பகைவ ராகிய பார்சியரைத் துரத்தியபின் தம்முள் முரண்பட்டனர். சொற்ப காலம் ஏதென்ஸ்நகர் தலையெடுத்தும் சொற்பகாலம் ஸ்பாட்டாநகர் தலையெடுத்தும் வந்தன. முடிவில் யவனநகர் யாவும் மசிடோனிய ருடைய ஆட்சியை ஏற்றன.

யவனர் தம்மை எல்னியர் எனவும் தம் நாட்டை எல்லாஸ் எனவும் வழங்கினர். யவனநாடுகளில் ஒன்றுகிய எப்பிரஸ்நாட்டில் ஒருபகுதியில் வசித்தோரை உரோமர் அறிந்து அவரைக் கிரேக்க ரென அழைத்தனர்; பின்னர் அப்பெயரையே யவனர் யாவருக் கும் சூட்டினர். யவனர் பிறரைப் புலப்படாதமொழிபேசுவோர் என்னும் பதத்தால் குறித்தனர். எல்லாஸ் என்னும் யவனதேசம் ஐரோப்பாக்கண்டத்தில் தென்திசையிலுள்ள ஒரு குடாநாடு. மலை யும் மலைசார்ந்த இடமுமாகலின் யவனநாடு குறிஞ்சிநிலமாயிற்று. நாடுசுவாத்தியமானது; மண் செழிப்பானது; குடாக்கள் பலவுடைய கடற்கரையுடையதாகலின், துறைகள் பல தோன்றின. ஆதியில் வசித்த குடிகள் யவனர் டோரியர் எயோலியர் என முப்பிரிவினர். யவனமொழி சிறப்புற்று வளர்ந்தது. போர்வித்தை டோரியரால் பாராட்டப்பட்டது. யவனருடைய தலைநகர் ஏதென்ஸ்; டோரிய ருடைய தலைநகர் ஸ்பாட்டா; எயோலியர் பலகுழுவினராக இருந்த னர். அவர்களுள் சிறந்தோர் தீபர். தீபருடைய நகர் தீபு எனப்படும்.

மேற்குக்கரைப்பிரிவாகிய எப்பிரஸ்நாட்டில் சாத்திரம் சொல் லும் டடானுக்கோயில் உளது. யவனருடைய கயிலையங்கிரியாகிய ஒலிம்புமலை வடகீழ்க்கரையில் உளது. பாக்கியநாட்டில் கலைத் தேவதைகள் பிரியமுடன் வசிக்கும் பாணார்சஸ்மலை உளது. தென் னடு பிலப்பு என்னும் அரசனின் பெயரால் பிலப்பனீசஸ் என்னும் பெயர்பெற்றது. அதுவே ஸ்பாட்டருடையநாடு. குடகரைத் தீவு களில் யவனரும் குணகரைத்தீவுகளில் டோரியரும் குடியேறினர்.

யவனபூசகர் தம்தேவர்களின் ஏவல்களைக் கூறினர். வானுக்கு அதிதேவதையாகிய 'சேயஸ்' தான் முதற்கடவுள். அவருடைய தேவி கீரா என்னும் பூமாதேவி. கடலைக்காக்கும் டமீற்றரும் பூகம்ப காரணனுகிய பசிடனும் இசைக்கடவுளாகிய அப்பலோவும் அபிரோ டிற்றி என்னும் காமதேவதையும் பலாஸ் அதினி என்னும் ஞான தேவதையும் ஆறிஸ் என்னும் போர்த்தேவதையும் ஆட்டமிஸ் என்னும் வேட்டைத்தேவதையும் கேர்மிஸ் என்னும் தேவதூதனும் பாதாளத்தில் ஆளும் புளூற்றோவும் பிரதானமான தெய்வங்கள். வனதேவதைகள், நீரரமகளிர், வரையரமகளிர் இடையர்தெய்வ மாகிய ஆட்டுக்காற்றெய்வம், பாக்கஸ் என்னுங் களித்தேவர், எஸ் கிலாபியஸ் என்னும் மருத்துவர், முதற்கடவுளின் மகனுகிய கராக் கில்ஸ் என்னும் வீரத்தெய்வம் என்பவை யவனருடைய சிறுதெய் வங்களாயின. களித்தேவரையும் வீரத்தேவரையும் நாடகநூலாசிரி யன் அரிஸ்தபானுஸ் இழித்து வசைப்பாட்டுக்கள் பல பாடியுள் ளான். நான்காண்டுக்கொருமுறை பெருந்தேவர்விழாவாக விளை யாட்டுக்கள் நடைபெற்றன. இவ்விளையாட்டு முதன்முதல் காலோட்டம் ஒன்றுய் இருந்து, பின்னர், பாய்தல், மல்யுத்தம், ஈட்டியெறிதல் தேரோட்டல், குதிரையேற்றம் எனப் பெருகிற்று. விளையாட்டுக்கள் ஐந்துநாட்கள் நடைபெறும். அதில் முதன்மை அடைந்தோர்க்குப் பரிசாக ஒலிவுமாத்தின் கிளையொன்று அளிக் கப்படும். யவனநாடுகள் யாவற்றிலிருந்தும் வீரர் களியாட்டத்தில் பங்குபெறச்சென்றனர். இவ்விழாக்களைப்பற்றிப் புலவரான பிண் டார் செய்யுட்கள் பல இசைத்திருக்கின்றனர். களித்தேவர்விழா வைப் பாணர் கொண்டாடினர். பாணர் தம் இசையாற்றலைக் காட்டி யும், கூத்தர் தம் ஆடற்றிறனைக்காட்டியும், புலவர் தம் பாடற்றிற னைக்காட்டியும் பரிசுபெற அவாவினர். விழாமுடிவில் யவனர்கூடி வீதிவலஞ்செய்தனர். திருவிழாக்காலங்களில் கோயிலதிகாரிகள் பணஞ்சேகரித்தனர். யவனர் பலரும் ஒருவழிப்பட்டுத் தம் சமயத் திற்காக அந்நியரோடு போர்புரிந்தனர். புகழ்பெற்ற டெல்பிக்

கோயிலிற் சாலினி ஒருத்தி கிடங்கில்வைத்த முக்காலியொன்றிற் குந்தியிருந்து பலிகளையேற்று நறுமணங்கமழும் புகைகளைச் சுவாசித்துத் தெய்வமுற்று ஓலமிட்டலறிச் சாஸ்திரஞ்சொல்லுவாள். அக்கோயிற்பூசகருக்குமாத்திரம் அவளுடையபேச்சு விளங்கும். அக்கோயிலில் வணங்குதற்கு இந்தியாமுதலிய வேற்றுநாட்டு வேந்தரும் சென்றனராம். யவனருடைய மிகப் புராதனகோயில் டடானுவே. யவனர் தம் பாரம்பரியவரலாற்றின்படி தசாலிநாட்டினின்றும் போந்தனர். எலேனியரின் மூதாதை தியூக்காலியன் எனப்படுவன். உலகுமுழுதும் மழைவெள்ளத்தால் அழிந்தபோதிலும் தியூக்காலியனும் அவன்பெண் பிராவும் முதல்வனின் அருள் பெற்றுத் தப்பினர். இவர்களிலிருந்தே மானிடசமூகம் புனருத்தாரணஞ்செய்யப்பட்டதென்ப.

வரலாற்றாசிரியர்கள் யவனருடையசரித்திரத்தை கி. மு. 1100 ஆண்டுதொட்டுத் தொடர்கின்றனர். ஆகலின் யவனருடையநாகரிகம் மிகப் பழையதாகின்றது. பண்டைப்பொருளாராய்ச்சிவல்லோர் மைசினை என்னும் பாழூரைத் தோண்டித் தம் ஆராய்ச்சியின் முடிபாக யவனர் கி. மு. 2000 ஆண்டுகளுக்குமுன்னமே மாடமாளிகைகளும் கோட்டைகோபுரங்களும் அமைக்கவல்லாராய்ச் சீரிய நிலையில் இருந்தனர் எனச் செப்புகின்றனர். கிறீற்றுத்தீவில் நோசஸ் என்னும் பாழூரை ஆராய்ந்தோர் ஆங்குள்ள சில கல்வெட்டுக்களைக் கொண்டு யவனர்க்குமுன் அந்நாட்டில் வேறொருசாதியார் நாகரிகமுற்றிருந்தனர் எனக் கருதுகின்றனர். பழைய எழுத்துக்களில் வரையப்பட்டமையால் அக்கல்வெட்டுக்களின்கருத்து விளங்க முடியாமல் இருந்து இருபதாம்நூற்றாண்டில்தான் தெளியப்பட்டது. அவ்வெழுத்துக்கள் யவனலிபிகள் அல்ல. யவனநாட்டுள் ஆரியர் வடக்கிருந்து தென்னாடுபுக்கனர் எனத் தெரிகின்றது. யவனருடைய வாழ்க்கையைப்பற்றி இலியட் ஒடிசி என்னும் இதிகாசங்களை வாசித்து அறியலாம். இவ்விதிகாசங்கள் அந்தகனாகிய கோமர் என்னும் புலவராற் புனைந்துரைக்கப்பட்டன. கோமர் யவனர்க்கு ஆக்கியர் எனப் பெயரிட்டனர். இலியட்டின் கதை வருமாறு:—

அகமன்னன் என்பவன் ஆக்கியர் என்பவரை ஆண்டிருந்தான், அவன் தம்பி மனிலேயன் எலன் என்னும் அழகிற்சிறந்தமங்கையை விவாகஞ்செய்திருந்தான். அக்காலத்திற் காமதேவதையும் ஞானதேவதையும் முதல்வியும் ஒருங்கு இருந்தனராக அவர்மத்தியில் பொற்பழமொன்று விழுந்தது. அதன்கண் 'இப்பழம் அழகிற்சிறந்தவளுக்கு உரியது' என வரையப்பட்டிருந்தமையின் மூவரும் கலகப்பட்டு நடுவுநிலைமையோனைவேண்டி உரோஜமாநகரத்து இளங்கோவாகிய பரிஸ் என்பானிடஞ்சென்று முறையே அழகினையும் ஞானத்தையும் செல்வத்தையும் அளிப்பதாக வாக்களித்தனர். பரிஸ் காமதேவிசார்பாகத் தீர்ப்புச்சொல்லி அத்தேவியின் உதவி பெற்று எலனென்னும் அழகியைக் கவர்ந்து ஏகினான். இவ்வாறு பிறர்மனைவிழைந்ததே உரோஜமாயுத்தத்திற்கு ஏதுவாயிற்று. அகமன்னன் குறுநிலமன்னரையும் வீரரையுங் கூவித் தன்குமரி இபிசினியாவைக் கடற்றெய்வத்திற்குப் பலியிட்டு நன்முகூர்த்தம் பார்த்துப் புறப்பட்டான். போர் பத்தாண்டு நீடித்தது. ஆக்கிய யவனர் உரோஜமாநகரை முற்றுகையிட்டனர். அக்கிலீஸ் என்னும் வீரனும் அகமன்னனும் பிறைசிஸ் என்னும் அடிமைப் பெண்நிமித்தம் கலகப்பட்டுப் போரை வெறுத்தனர். பின்னர்த் தன் நண்பனொருவனைக் கெக்ரர் என்னும் பகைவர்தலைவன் கொன்றான் என அக்கிலீஸ் கேள்வியுற்றுச் சீறியெழுந்து தேவதையொன்றின் உதவியால் கெக்ரரைக் கொன்று மதில்மீது இழுத்துத்திரிந்தான். [யவனர் வீரருடைய உடம்புக்குச் செய்யும் மரியாதையை அறிந்திலர்போலும்.] பகைவரைப் போரில் வெல்லமுடியாதென்பதை அறிந்து ஒடிசியஸ்வீரன் தந்திரத்தால் நகருட்புகுந்தான். யவனர் மரக்குதிரை ஒன்றுசெய்து அதன்வயிற்றுள் வீரர்சிலரையடைத்து நிறுத்தித் தம் கப்பல் ஏறிப் பாய்வலித்துச்சென்றனர். உரோஜர் மரக்குதிரையை நகருள் இழுத்தனர். அன்றிரவு யவனர் திரும்பிவந்து நகருட் புகுந்து அயர்ந்துறங்கும் வீரர்களைக் கொன்றுகுவித்து நகருக்குத் தீயிட்டனர். இவ்விதிகாசங்களிலிருந்து யவனமன்னர் சமயத்தைவளர்க்கும்படி பூசாரியர்களைக் கற்பித்தும், படைத்தலைமைவகித்து நாட்டைக் காத்தும், நீதிபதிகளை ஏவி நீதிசெலுத்தியும் வந்தனர் எனத் தெரிகிறது. மேன்

மக்கட்சபையும் பொதுசனச்சபையும் அரசியலை நடாத்தின. யவனர் இனத்தோரைக்கோறல் மறமெனவும் சூறையாடல் அறமெனவும் எண்ணினர். ஆதிகாலத்து யவனர் நாணயம்வழங்கவில்லையெனவும், நாணயத்திற்குப் பதிலாக ஆடுமாடுகளை உபயோகித்தனர் எனவும் பூகோளநூல்கற்றிலர் எனவும் பினீசிய எகிப்திய கல்வெட்டுக்களால் அறியலாம்.

ஸ்பாட்டர் சரித்திரகாலம் கி. மு. 1100 ஆண்டுடன் தொடங்குகிறது. டோரியர் பலப்பநீசஸ்குடாநாட்டில் குடியேறினர். வடதீவுகளில் அயோனியரும் தென்றீவுகளிலும் சின்னாசியாக்கரையிலும் டோரியரும் குடியேறினர். கி. மு. ஏழாம்நூற்றாண்டில் யவனர் எலனியர் என்னும் நாமம் பெற்றனர். கி. மு. 850 ல் ஸ்பாட்டா நகரத்தில் டோரியர் குலதிலகமாக லிக்காக்கஸ் என்னும் குரிசில் தோன்றினன். இவன் தன் மருகனின் அரசைக் கவரஎண்ணினானெனச் சிலர் கூறினராக, அவன் நாடுதுறந்து எகிப்து இந்தியா முதலிய நாடுகளுக்குச்சென்று அறிவுமுதிர்ந்து தன்நாடு திரும்பி நற்பிரமாணங்களையும் திருத்தமுறைகளையும் நல்கினான். ஸ்பாட்டர்யாவரும் போர்புரியப்பயிலுதல்வேண்டும். பெற்றோர் தம் ஆண்குழவிகள் பிணியராயின் குன்றின்மீது வீசிவிடுவார். குழவிகள் உருநலம்வாய்ந்தோராயின் ஏழாண்டுநிறைவேறியவுடன் அரசாங்கத்தாரால் வளர்க்கப்படுவர். சிறுவர்க்குச் சுவையற்ற உணவும் சிற்றாடையுமே அளிக்கப்படும். சிறுவர் வெறுங்காலாலேயே நடக்கவேண்டும். சிறுவர்கள் அகப்படாமல் களவுசெய்யப் பயிலவேண்டும். அகப்படின் மூடரெனத் தண்டிக்கப்படுவர். சிறாரின் தைரியத்தையும் மனவலியையும் அளத்தற்காக அவரை அடித்துவருத்துதல் வழக்கம். அச்சமின்றி அடிவாங்குவோர்க்குப் பரிசு அளிக்கப்படும். வீரச்சுவை விரவிய பாடல்களைச் சிறுவர் மனனஞ்செய்வார்கள். அவர்கள் போர்முறைகளைப் பயின்றபின்னர் முப்பதாமாண்டில் குடிகளுக்குரிய உரிமைகளைப் பெற்றுவாழ்வர். ஆடவர் உருவிற்பொலிந்துவளரும் பெண்டிரை மணஞ்செய்து வீரர்களைப் பெறக்கடவர். "நும்பரிசத்துடனேனும் மேலேனும் வருதியென மகனைப் போர்க்களத்துக்கேவுதல் ஸ்பாட்டத்தாயின் இயல்பாம். ஸ்பாட்டர் வணிகத்தைத் தவிர்த்துக் கமத்தொழில்

செய்வர். கி. மு. 300-ல் ஸ்பாட்டர்தொகை 10,000. குடிகளுள் ஒவ்வொருவருக்கும் அரசாளும் அங்கத்தினரைத் தெரிவுசெய்யும் உரிமையுண்டு. அறுபதுவயது முதிர்ந்த வயோதிகர் இருபத்தறுவர் அமைச்சராகத்தெரியப்படுவர். அருஸ்தத்தீமன் என்னும் அரசனுக்கு இரட்டைப்பிள்ளைகள் பிறந்தமையால் ஸ்பாட்டா இணைவேந்தரால் ஆளப்பட்டது. ஸ்பாட்டருடைய அடிமைகளுக்குத் தெரிவுரிமையும் ஸ்பாட்டருடன் மணஞ்செய்யுமுரிமையும் அளிக்கப்படவில்லை. ஸ்பாட்டர் மைசீனாநாட்டைக் கைப்பற்றிய பொழுது அரசகுமாரத்தி ஒருத்தியைப் பலியிடும்படி டேல்பிக் கோயிலில் ஒரு வாக்குப் பிறந்தது. அரிஸ்தத்தீமன் தன் மகளைப் பலியிட்டான். மைசீனியர் அரிஸ்தமீனனின் தலைமையில் பகைத்தெழும்பினர். ஸ்பாட்டர் எதீனியரிடம் உதவிகேட்டனர். எதீனியர் அழுக்காறுற்று உதவிசெய்ய விருப்பமில்லாமையால் திரத்தியஸ் என்னும் ஒரு நொண்டி உபாத்தியை அளித்தனராம். ஸ்பாட்டர் நொண்டி பாடிய பாட்டுக்களைக் கேட்டுத் துணிவுபெற்றுப் பகைவரைவென்று அடியில்லாக்குழியில் இட்டனர். அரிஸ்தமீனன் ஒருவன்மாத்திரம் குழியில் மூன்றுநாள் உணவின்றிக் கிடந்து தன்மரணத்தை எதிர்பார்த்திருந்தான். மூன்றாம்நாள் பிணம் தின்னும் நரியொன்றின் வால்பற்றி அவன் வெளியேறினனாம். ஸ்பாட்டர் பின்னர் ஆர்க்கிவ்நாட்டையும் கைப்பற்றினர். கி. மு. 9-ம் நூற்றாண்டில் பினீசியர் அசிரியருடன் போர்புரிந்து இளைத்தமையால், பினீசியருடைய கப்பற்படைவலி குறைந்தது. யவனர் இஃதுணர்ந்து பிறநாடுகளிற் குடியேறத்தொடங்கினர். கி. மு. (900) தொளாயிரத்தில் இத்தாலிநாட்டிற் குடியேறிக் கோமாயி நகரை நாட்டினர். கி. மு. 734-ல் ஸ்பாட்டர் இராறந்தம் கக்கீரா என்னும் நகரங்களை இத்தாலியநாட்டிலும் சிராக்கூசாப் பட்டினத்தைச் சிசிலித்தீவிலும் அமைத்தனர். 580-ல் சிசிலித்தீவில் அக்கிரிக்கந்தம் என்னும் துறையிலும் குடியேறினர். கி. மு. 720-ல் ஆக்கியர் சிபாரிஸ் நகரிலும் மாசீலா என்னும் கல்லியநாட்டிலும் குடியேறினர். ஸ்பாட்டர் பைசாந்தியம் என்னும் நகரை நிறுவிய வரலாறு வருமாறு:—ஸ்பாட்டவீரர் தாம் மைசீனாநாட்டைக் கைப்பற்றாமல் வீடுதிரும்புவதில்லையெனச் சத்தியஞ்செய்தமையால்

ஆங்குப் பலகாலம் கழித்து அந்நியப்பெண்களுடன் களிக்க நேரிட்டது. பிறசாதியாரிடம் பிறந்த பிள்ளைகள் ஸ்பாட்டா நாட்டில் அந்நியராகவே கவனிக்கப்படுவாராதலின் அப்பிள்ளைகள் பைசாந்தியத்தில் குடியேறினர்.

கி. மு. 700 முதல் கி. மு. 500 ஈறாக யவனநாடுகளில் கொடுங்கோலர் பலர் ஆண்டனர். ஒரு கொடுங்கோலனின் மகளை மணஞ்செய்தற்கெனப் பலர் அவன்மாளிகையில் இறங்கினர். அவருள் எதீனியர் இருவரை அரசன் தெரிந்தான். ஒருவன் தன்ஆடற்றிறனைக்காட்டி முடிவில் தலைகீழாக நின்றான். உடனே அரசன் எழுந்து உன் ஆட்டம் உனக்குக் கேட்டைவிளைவித்ததென விளம்பி மகளை மற்றவனுக்கு அளித்தானாம். கோறிந்து நகரத்துக் கொடுங்கோலன் தன்கொடுங்கோலை எங்ஙனம் நிலைக்கச்செய்யலாம் என அறியும்படி மிலிற்றஸ்தீவுக் கொடுங்கோலனிடம் தூதரை அனுப்பினான். அவன் தூதரை ஒரு வயலூடேகூட்டிச்சென்று உயர்ந்துவளர்ந்த பயிர்களைக் கிள்ளிவிட்டான். அச்செயலைத் தூதர் தம் அரசனுக்கறிவிக்க அரசன் அவன் கருத்துணர்ந்து தன்னாட்டுப் பிரபுக்கள்சிலரைக் கொன்றான். அக்கொடுங்கோலன் தன் மனைவியைக் கொன்று தன்மகனைக் கக்கீராத்தீவுக்கு நாடுகடத்தினான். சிலஆண்டுகட்குப்பின் தன்மகனை அரசபதவியை ஏற்கும்படி கேட்டான். மகன் தான் தன்தந்தை நாட்டிலிருக்குந்துணையும் வீடுதிரும்புவதில்லை என விடைகூறினான். உடனே தந்தை கக்கீராத்தீவுக்குச்செல்ல, மகன் ஊர்க்குச்சென்று ஆண்டான்.

[தொடரும்]

பூனையும் பூசையும்.

(நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசர்.)

பாஷைகள் எல்லாம் ஆதியிலே ஒருசில சொற்களைமட்டில் உடையனவாயிருந்து, படிப்படியாகவே பல்லாயிரம் சொற்களைப் பெற்றன என்றது மொழிநூல் என்னும் சாத்திரத்திற் பயின்றவர்கள் சம்மதித்துக் கூறுகின்ற ஒரு உண்மை. அப்பால், முன்இருந்த சிலசொற்கள் தாம் மாறியும், விரிந்தும், ஒன்றோடொன்று கூட்டுண்டும், இன்று நாம் கையாளுகின்ற பலசொற்கள் ஆயின என்றது மற்றொரு உண்மை. இம்மாற்றம் ஆகியனவற்றை ஆராய்ந்துகூறுவதுதான் மொழிநூல். மொழிநூல் வேறு, இலக்கணநூல் வேறு. முன்னையது தனிச்சொற்களின் இயல்பையும், அவை தம்முள் அடையும் மாற்றங்களையும் கூறும்; பின்னையது சொற்கள் ஒன்றோடொன்று கூடும்போது முன்னிலை, இறுதிநிலைகளில் கொள்ளும் விகாரங்களை எடுத்தோதும். தமிழில் தொல்காப்பியம் முதலாகப் பல இலக்கணநூல்கள் எழுந்துள்ளன. மொழிநூல்களோ சமீபகாலத்தில்மட்டும் வெளிப்படத்தொடங்கியன ஆகும். மாகறல் கார்த்திகேயமுதலியார் இயற்றிய "மொழிநூல்" (1913) இந்த நிரையில் முதன்முதற்செய்த பிரயத்தனமாய் மேலும் பல திருத்தங்களுக்கு இடனாய்க் கிடக்கின்றது. டாக்டர். P. S. சுப்பிரமணியசாஸ்திரியார் சென்றவருஷம் வெளியிட்ட "தமிழ்மொழிநூல்" உண்மையில் இலக்கண ஆராய்ச்சி நூலே அன்றி மொழிநூல் ஆகாது. எனது "தமிழ் அமைப்புற்ற வரலாறு" (1927) "தமிழ்ச்சொற்பிறப்பு ஆராய்ச்சி" (1932) எனும் இரண்டும் யதார்த்தமான மொழிநூலினுக்கு உரிய அத்திவாரங்களை இட்டன எனச் சொல்லலாம். மேற்கட்டிடம் மெல்ல மெல்லக் கிளம்பவேண்டியதாகும்.

இவ்வளவையும் முன்னுரையாக வைத்து, இனி, "பூனையும் பூசையும்" என்ற எமது விஷயத்தை ஆராயக்கடவோம். பூசைச்

சொல்லில் நின்றே பூனைச்சொல் எழுந்தது என்று யான் சொல்லிவிடின், இதன் புதுமையைநோக்கி, இதைப்படிப்போர் சிலர் நகைத்தலும் கூடும். பத்திரிகைகளை வாசிப்போர் குதூகலங்கொள்வதும் நன்றுதான். ஆயின், ஆராய்வோடு வாசிப்பின், முன்பு எள்ளவேண்டியதாகத்தோன்றியது பின்பு கொள்ளவேண்டியதாக வரும். இனி, பூனைச்சொல்லின் உற்பத்தியை அறிதல்வேண்டுமாயின், பழந்தமிழை ஆராய்தல்வேண்டும். பூர்வ இலக்கியங்களில் அது பூசை என்றே காணப்படுகிறது. "வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றல்" பழங்காலவழக்காம் என்பர் தொல்காப்பியனார் (பொருள். 624). இப்பூசைச்சொல்லைக் கம்பநாட்டாழ்வாரும் எடுத்துவழங்கிப் "பாற்கடலுற்றொரு பூசை முற்றவு நக்குபு புக்கென" எனப் பாடினார். இதனை அடியொற்றி, வீரமாமுனிவரும் தமது "தேம்பாவணி"யில் "அமிர்தமுடை கடலென்ன நண்ணிப் பூசையுற்றதனை நக்கப் புக்கென" என்று வருணித்தார். ஏலவே தமிழினின்றும் பிரிந்துபோய்விட்ட மலையாளத்தில் இப் பழஞ்சொல் பூச்ச என நிற்கின்றது. தமிழிலும் பூச்சை என வழக்கு உண்டு. இனி, நமது மொழியில் சகரம் ஞகரமாய் மாறுதல் இயல்பாதலால், இப் பூசைச்சொல் பூஞை எனவும் வரலாயிற்று. "பூசை அலவன் விருடகம் பூஞை" என்பது பிங்கலந்தை (208). பூஞைதான், ஈற்று ஞகரம், தன் இயல்பின்படி னகரமாகி, பூனை என்றாயிற்று எனக் கண்டுகொள்க. பழந்தமிழாகிய மலையாளத்தில் எமது "(இ)யான்" ஞான் என நின்று, பின் தமிழில் நான் என்றதில் ஞகரம் நகரமாவதைக் காணலாம். "யாத்தல்" ஞாத்தல் எனவும், "நாண்" ஞாண் எனவும், மறுபக்கத்தில், "ஞாயிறு" இழிசனர்வழக்கில் நாயிறு எனவும் வருதல் நோக்கத்தக்கது. இவ்வாறே முன் பூசை என்றிருந்த சொல் தற்காலம் பூனையாகிவிட்டமை காண்க.

இனி, பூசை என்ற பெயர் இற்புலிக்கு வந்தது எவ்வாறு எனவும் ஆராய்வது மொழிநூலாளர்கடனும். பூசைச்சொல்லுக்கு உற்பத்தி "பூசுதல்" என்று அறிவது பலர்க்கு விநோதம்பயக்கும். பூசுதல், "தடவுதல்" என்ற அர்த்தம் உள்ள ஒருசொல். பொருட்களில் புறப்பாடாகத் தோன்றும் குணங்களைக்கொண்டுதான்

ஆதியில் அவ்வவற்றிற்குப் பெயர் இடப்பட்டது என்றல் சொல்லாராய்ச்சியால் முடிந்தமுடிபு அன்றோ? தன் முகத்தையும் பிறவிடங்களையும் அடிக்கடி தடவிக்கொள்ளுதல் பூனையிடம் புறப்பாடாய் உள்ள ஒரு குணம். இதனைக்கொண்டு அப் பிராணி பூசை எனும் பெயர் அடைந்தது எனத் தோன்றுகின்றது. வடமொழியில் பூனையின்பெயர்களுள் ஒன்று "மார்ஜார" என்பது. இதற்குப் பொருள் "தடவித்துடைப்பது" தான். துடைத்தல் எனும் பொருளுள்ள மார்ஜ், அல்லது ம்ருஜ் எனும் அடியில்நின்று மார்ஜாரச்சொல் பிறந்து, அடிக்கடி துடைத்துக்கொள்ளுகின்ற பிராணிக்குப் பெயராயிற்று என்பது ஸம்ஸ்க்ருத அகராதிகாரரின் கொள்கையுமாம்.

அப்பால், பூசுதல் என்ற சொல் எவ்வாறு எழுந்தது எனவும் ஆராய்வோம். இவ் ஆராய்ச்சி சற்றே விரியும்; ஆயினும், வாசிப்போர்க்கு மகிழ்ச்சிதராமல் விடாது. பூசுதற்சொல்லின் அடியைக் காண நாம் பசைச்சொல்லினை நோக்குதல்வேண்டும். அதை விவரித்துச் "செந்தமி"ழில் (xxviii 393-4) முன்னொருமுறை யான் எழுதியதை இங்கு அநுவதிக்கத்தகும்: "செந்தமிழ்நூல்களிற் பசை எனும் ஓர் வினையடி காணப்படும். பசைதல்=பற்றுதல். "பசைதல் பரியாதா மேல்" (நாலடி.) உண்மையில் பசை, பற்று எனும் உருவங்கள் இரண்டும் நச்சு (நசை), நத்து ஆதியனபோல, அடு, அத்து என்றற்றொடக்கமான முதற்சொல்லடிகளின் விகாரமேயாம். (தமிழமைப்புற்றவரலாறு 4-ம் அதிகாரம் காண்க). பசைதலையும் பற்றுதலையும் ஒப்புநோக்கிக்காணுமிடத்து, கடுமையின் மறுதலையாய், ஒட்டும்பெற்றிவாய்ந்ததாய் இருக்கும் நீர்த்தன்மையோடுகூடிய இளக்கமே பசையாம் என வெளிப்படும். ஈரப்பசை, ஈரப்பற்று எனும் வழக்குகளையும் ஒப்பிடுக. பசைச்சொல்லினுக்கு இதுவே ஆதி அர்த்தமாமென்பது அன்னிய மொழிகளின் சொல்வழக்குக்களாலும் இனிது வலியுறுத்தப்படும். ஆரியத்தில் இது பச், பக்ஷ் என, 'தொடுத்தல்', 'கட்டுதல்,' 'அன்பு (அண்பு) கொள்ளல்,' ஆதிய பொருள்தரும். லத்தீனில் pango 'இறுக்குதல்,' கட்டுதல்,' paciscor 'தளராது நாட்டுதல்', pac-o 'ஒன்றுகூடல்' என நிற்கும். அம்மொழியின் pax

‘உறவாடல்’ எனும் சொல்லும் எமது பசைதல் என்னும் சொல்லும் ஒப்புநோக்கி மகிழத்தக்கன. இத்துறையை விரிப்பின் வரம்பின்றி ஓடும். இது கிடக்க: பசைச்சொல்லே பிசை என நிற்கின்றவழி, யாம் எடுத்துரைக்கவிரும்புவது இதைப்படிப்போர்கட்கு எளிதிற் புலனாகும். பிசைதல்=நீர்த்தன்மையான பொருளைக் குழைத்தல். பிசைச்சொல் பிசின் என நின்று பசைத்தன்மையுள்ள சாம்பிராணியையும், பசைவிசேடத்தையும் குறிக்கும். பிசினி=பசை. இனி, பிசினியும் பிசுனமும் பஞ்சைக் குறித்தலுமொன்று. பஞ்சுச்சொல்லும் பசைச்சொல்லின்விகாரமேயாம். இளக்கமாய் (பசை), மிருதுவாய் உள்ளது பஞ்சு. பிஞ்ஜ், பஞ்ஜி எனும் ஆரியச்சொற்களையும் ஒப்புநோக்குக. பிசினும் பசையும் ஒருசொல்லே என்பதை மேலும் உய்த்துணரவேண்டின், பிசினே பயின் பயிர்ப்பு என இலக்கியங்களில் நிற்றலைக் காண்க. “கப்பிணர் மரத்திற் காலும் பயினதாய்” (திருவிளை. இந்திரன் பழி. 13) “பலகோட் பலவின் பயிர்ப்புறு தீங்கனி” (கலித். 50). எமது பசை, பிசின் என்னும் சொற்கள் லத்தீனில் (பிக்ச்) pix, கிரேக்கத்தில்(பிஸ்ஸ)pissa,வடமொழியில்பீது(தாரு)எனப் பிசினை, பிசின்மரத்தையும், லத்தீனில் ping-ere,வடமொழியில் பிஞ்ஜ் எனப் பசை (வர்ணம்) பூசுதலையும் காட்டும்சொற்கட்கு அடியாய் விளங்குதலையும் அறிந்து மகிழ்க. (தொல்காப். சொல். 308. காண்க)”.

“பசைதல்” பிசைதலாய்வந்ததைக் கண்டோம். “பிசைதல்” பீச்சுதல், அதாவது தடவிப் பால்கறத்தல் எனும் சொல்லினூடாய்ப் பூசுதல் என வந்ததுபோலும். ஆங்கிலத்தில் பால்கறத்தல் எனும் பொருள்கொண்ட (Milk எனும்) வினைச்சொல் ம்ருஜ் எனும் தடவுதற்பொருள் உள்ள வடமொழி அடியினின்று பிறந்தமையும் நோக்கத்தக்கது. ஈகாரமும் ஊகாரமும் தம்முள் மாறி வழங்குவது இயல்பு. “பீளை” பூளை என வந்தமை காண்க. ஆகவே பீச்சுதல் (தடவுதல்) தான் பூசுதல் (தடவுதல்) என வந்தது என்று கொள்ளலாம்.

பொருளளவில் (உருவத்தளவில் அன்று) பீச்சுதலோடு ஆங்கில Milk மில்க்கு-தலை ஒப்புநோக்கலாம் என்றேன். இம் மில்க் எனும் சொல்லும் ம்ருஜ் எனும் வடசொல்லும் ஒன்றே என்பது ஐரோப்பியமொழிநூலாளர்க்கெல்லாம் சம்மதம். இனி, எம் தமிழ் அடிகள் ஐரோப்பியபாஷைகளுக்கும் அடிகளாம் என்பது எனது மதம் அன்றோ. அதற்கு இதிலும் ஒரு சான்று இருக்கின்றது. மில்க், ம்ருஜ் எனும் சொற்கள் எவ்வாறு உண்டாயின? எமது மெழுக் (மேல்) எனும் வழியடியே அச்சொற்களுக்குப் பிறப்பிடம். சாணி ஆதியவற்றைத் தடவுதலே மெழுகுதலாம். “முகின்முலை மெழுகிய சாந்தின்” (கம்பரா. பிணிவீ. 53). “பூசி மெழுகுதல்” என்ற தொடரையும் கவனிக்க. மெழுகுதலே மில்க்-உதல் ம்ருஜ்-உதல் என வந்தன என்று தமிழ் ரீதிப்படி எழுதிக்காட்டலாம். ம்ருஜ் எனும் வடசொல்லினின்று மார்ச்சாரம் (பூனை) வர, அச் சொல்லின் வேறொரு உருவத்தினின்று Milk (பால்) வர, பூனைக்கும் பாலுக்கும் பெருங்கொண்டாட்டம் உண்டாயிருத்தலும் ஒரு விநோதம். அப்பால், மேல்தடவப்படுவதினால், தேனீசமைத்த “பிசி”னுக்கு மெழுகு எனும் பெயர் வந்தது. மெழுகை வடமொழியில் மாக்ஷிக என வைத்து அதற்கு மக்ஷ் என ஒரு அடியும் பிறப்பிப்பர். மக்ஷ (தேனீ, குளம்பு) எமது மெழுகில்நின்றே எழுந்ததுபோலும். மசக எனும் சொல்லும் அப்படியே எனலாம். அப்பால், மெருகு எனும் சொல் மெழுகின் திரிபாம். மெருகிடுதல்=தடவித்தடவி அழுத்தமாக்குதல். மெழுகு என்பதில் மேல் எனும் அடியின் லகரம் ழகரமாயிற்று. மெருகு என்பதில் அந்த ழகரம் ரகரமாயிற்று. வடமொழி ம்ருஜ் எனும் சொல்லில் மெழுக் என்பதின் ழகரம் றகரமும், ககரம் ஜகாரமும் ஆயின. இவையெல்லாம் மொழிநூல்விதிகளுக்கு ஒத்த மாற்றங்களே.

இனி, கசிதல், குழைதல் எனும் அர்த்தமுள்ள பொசிதல் எனுஞ் சொல்லும் பிசைதலோடு ஒப்புநோக்கத்தக்கது. நீர்த்தன்மையுள்ளபொருளை யாதேனுமொன்றின்மேல் தடவுதல் “பூசுதல்”என வந்து, பின் கேவலம் கையால் தடவுதலும் பூசுதல் ஆயிற்றுப்போலும். மேற்காட்டிய பிசினை ஒத்த (Pix எனும்) லத்தீன் சொல்லில் நின்று Pingere எனவும், வடமொழியில் பிஞ்ஜ் எனவும் பூசுதல் அர்த்தமுள்ள வினைகள் பிறந்தன அன்றோ? அவ்வாறே

பிசை எனும் அடியாய்ப் பூசுதல் பிறந்தமையும் ஒப்பத்தக்கதேயாம். பூசைச்சொல்லின் சரித்திரத்தைப் பின்வருமாறு சூசிப்பிக்கலாம்:—அத்து—பசை—பிசை—பீச்சு—பூசு—பூசை. எமது பூசை எனும் பூனைப்பெயர் பிராகுயிபாஷையில் பிஷ்சி எனப்படும்; மூண்டா எனும் வடக்கிந்தியபாஷையில் பூசி; பலுச்சிஸ்தானியில் பூஷீ; திபேத்பாஷையில் பிசி; ஆப்கானியபாஷையில் பிசோ; பார்சிகத்தில் புஷக்—போஷக்; ஐரோப்பியபாஷைகளில் Puss முதலிய உருவங்களுண்டு. இவற்றை ஒலிக்குறிப்பு என்பவர் சிலர். இச்சொற்கள் பூசையோடு உறவுகொண்டனவாயின் அவர் கொள்கை தவறாகும்.

பூசுதலில் (தடவுதலில்) நின்று பூனையின் பூசைப்பெயர் வந்தது என்றால், ஆலயங்களிலே செய்யும் பூசையும் பூசுதலில்நின்று பிறந்ததா? ஆம் என்பர் ஆராய்ச்சியாளர் சிலர். தெய்வத் திருவுருவங்களைச் சந்தனம் தைலம் முதலியவைகளால் பூசிப் புணர்த்துதல் ஓர்காலம் முக்கியமான ஆலயவழிபாடாய் இருந்தது; ஆயின், அதுதான் பூசை என்று வந்ததாகலாம். வடமொழியில் நமது பூசுதலோடு சம்மந்தப்பட்ட(bhush எனும்)வினை அலங்கரித்தலைக் குறிக்கும். தமிழ்ப் பூசுதலும் அலங்கரித்தற்பொருள் உள்ளது. "பூசுறு பருதியிற் பொலிந்து தோன்றினான்" (சீவகசிந். 953). வடமொழியில் பூஜ் எனும் வினை திருமுன்பாகப்படைத்தலையே ஆதிப்பொருளாகக்கொண்டதுபோலும். "ரத்னை பூஜயேத் நகம்" "இரத்தினங்களை அணிவித்து வணங்கல்வேண்டும்". தமிழிலும் அடியார்திருவமுதுசெய்வித்தல் பூசை எனப்படும் அன்றோ. இவ் அர்த்தத்தில் பூசைச்சொல்லோடு புசித்தல் (வட. bhuj) போசனம் (bhojana) எனுஞ் சொற்களையும் ஒப்புநோக்கத்தகும். பிசைதலினின்று பிசைந்து உண்ணுதலாகிய புசித்தல் வந்ததாகலாம். இது "அப்பம் பிட்டல்" எனும் அர்த்தமுள்ள ஒரு தொடர் எபிரேயருள் சாப்பிடுதலைக் குறித்ததுபோல ஆகும். இவற்றால், பூசிப்புணர்த்துதல்தான் பூசை ஆயிற்று எனத் தோன்றும். பூசிப் புணர்த்தப்படுவோர் பூச்சியமானோர் (சங்கைமான்கள்), என வருதலும் இயல்பே. "பூச்சியம்" வடமொழிப் பூஜ்ய எனும் சொல்லினின்று வருவது. ஆயின் எவ்விடத்தும் சங்கைமான்களைக் காண்பது அரிதென்றமையால், பூச்சியச்சொல் அருமைக்கும், அப்பால், இன்மைக்கும் பெயராயிற்று. இனி, பூச்சியச்சொற்கு அடி பூசுதல்தான் என்றது விளங்க, அது மேற்பூச்சுக்கும் பெயராயிற்று. பூச்சியம்=குற்றம் முதலியவைகளை மறைத்தல் அல்லது "பூசி மெழுகிவிடுதல்".

அப்பால், பூசைச் சொல்லினின்று பூசாந்திரம், போசக்கை எனும் சொற்களும் கிளைத்தன. பூசாந்திரம்=அருமைபண்ணுதல், ஓர்வகைச்சேலை, ஓர்வகைக்கடுக்கன். போசக்கை=பூசுகை, மேற்பூச்சு, போலிவேலை. போசக்கையை யாழ்ப்பாணத்தில் "பூசுகை" என்றும் வழங்குவர். அதன் உற்பத்தி இதுவே என்றது நன்றாக விளங்குகிறது.

இனி முடிப்போம். பூனையும் ஆலயபூசையும் சொல் உற்பத்தியளவில் ஒன்றாயினும், காரியத்தளவில் எத்துணையோ தூரமானவைகள்! தெய்வ உருவச் சிலைகளுக்கு உரிய அபிஷேகாதிகளோடு கூடிய பூசைக்கு இற்புலியாகிய பூசை உபகாரமாகாது என்றதை விளக்கி அன்றோ: "கோவிற்பூனை தேவரை மதியாது" என்ற பழமொழியும் எழுந்துள்ளது!

ஸ்ரீ:

ஓர் அநுதாபக்குறிப்பு.

மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியராகிய ஸ்ரீமத். திருநாராயணையங்கார்ஸ்வாமிகளின் மாணவரும், ஷைசங்கத்துப் பண்டிதபரீக்ஷையிற்றேறி, மதுரைச்சேதுபதியுயர்தரப் பாடசாலையிலும் மதுரைக்கல்லூரியிலும் தலைமைத்தமிழாசிரியராயிருந்தவரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் நடத்தும் பரீக்ஷைகளுக்குப் பரீக்ஷாதிகாரியாய்ப் பலவருடமிருந்துதவிவந்தவரும், ஹரிசமய திவாகரப்பத்திராதிபரும், ஹரிசமயதிவாகர அச்சுக்கூடத்தின் தலைவரும், மதுரை ஸ்ரீசரண்யாபிமதவிஷ்ணுசித்த ராமாநுஜசபையின் ஸ்தாபகரும், மதுரை ஸ்ரீவைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய சபையின் அங்கத்தினருமான ஸ்ரீமான். ஆ. அரங்கராமாநுஜம்பிள்ளையவர்கள், 'குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை, கலையில் தெளிவு கட்டுரை வன்மை, நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியோடு' கூடிய புனிதவாழ்க்கையையுடையவராயிருந்துவந்தவர், சிலநாள் வியாதிவாய்ப்பட்டுத் தஞ்சைஜில்லாவைச்சேர்ந்த குற்றுலத்தில் பிரபல மிராசுதாரரும் ரைஸ்மில் சொந்தக்காரருமான ஸ்ரீமான். நாராயணசாமிரெட்டியாரவர்களுடைய பங்களாவில் வசித்துவருங்காலத்துத் தமது 46-வது வயதில் சென்ற 3—4—37 சனிக்கிழமையன்று பிற்பகல் 2½-மணிக்கு மானிடயாக்கையை நீத்துப் பரமபதமடைந்தனர். உள்ளூர்ப்பழுத்த பயன்மரம்போன்ற இவ்வுத்தமர்பிரிவு இவர் தொடர்புடையோர்க்கெல்லாம் வருத்தந்தரற்பாலதே.

கோ. வா. சாரங்கபாணி ராமாநுஜதாசன்.

ஸ்ரீ:

மதிப்புரை.

மாரிவாயில்,—இது, உயர்நீதிமன்றத்து நியாயவாதியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்தலைமைப்பேராசிரியருமாகிய திருவாளர். ச. சோமசுந்தரபாரதி எம். ஏ., பி. எல். அவர்களால் இயற்றப்பெற்றது.

இதனுள், பாண்டியகுலதிலகையான சித்திராங்கதையென்பாள், பாண்டவ நடுநாயகமான பார்த்தனை மணந்து பிரிந்த பிரிவாற்றுது காதலா லுள்ளங்கசிந்துவருந்துபவளாய் மாரி என்னும் மேகத்தை நோக்கிக் காமமிக்ககழிபடர்கிளவியால் அவனிடைத் தன்வேட்கை மிகுதியை அறிவிக்கவேண்டும் என்னும் பொருளைமேற்கொண்டு வாயில் என்னும் தூதுவிடுத்தசெய்தி விற்பனர்மகிழும் பற்பலகற்பனைகளாற் சொல்லப்பட்டுள்ளது.

இப்பிரபந்தத்துக்குச் சிறந்தபண்டிதர்களா லளிக்கப்பட்ட சிறப்புப்பாயிரங்களாலும் இதன் அருமைபெருமை நன்குவிளங்கும். நற்றமிழைக் குற்றமறக்கற்றுச் செய்யுளியற்றுந்திறத்தாற் சிறத்தல் மிகவும் அரிது. அதனினும் புலனுணர்வுக்கிலக்காகாது மனனுணர்வுக்கிலக்காகக் கொள்ளத்தக்க அன்புபற்றிய இன்பதுன்பங்கள் புலப்படப் பாடுதல் மிகவும் அரிதே.

இவ்வரியசெயலாலேயே புலவர்பெருமக்கள் தம்மையும் தம்மை ஆதரித்தவரையும் புகழுடம்பால் நீடூழிநின்றுநிலவச் செய்துவருகின்றனர். அக்குழுவிடை இப்பாரதியாரும் ஒருவராகற்பாலர். இவர் இத்தகையினராய் இந்நூலை இயற்றிவெளியிட்டதினின்றும் தம்பதவிக்கேற்ற தகுதியைப் பலருமறிய வெளிப்படுத்திக் கொண்டவராவர். இவர் இன்னும் தமிழ்வளர்ச்சிக்குரிய பல செயல்களைச் செய்துவர இறைவன் திருவருள்பாலிப்பானாக.

1. திருப்பேரைக்கலம்பகம், 2. திருவரங்கச்சிலேடைமாலை, 3. தனிப்பாமஞ்சரி:—இவை, பல பிரபந்தங்களியற்றியவரும், வானமாமலைமடம் ஆஸ்தானவித்வானும், தமிழ்ப்பெருமக்களால் அபிநவபிள்ளைப்பெருமாளையங்கார், அபிநவகாளமேகம் என்ற சிறப்புப்பெயர் சூட்டப்பெற்றவரும் ஆன தென்திருப்பேரை ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்காரவர்களால் இயற்றப்பெற்றவை. ஐயங்காரவர்கள் இயற்றியுள்ள பிரபந்தம் ஒவ்வொன்றும், அவ்வத்துறையில்வல்ல பழம்புலவர் நூலேபோன்று பயில்வார்க் கினிமையயப்பனவாமாயினும், திருப்பேரைக்கலம்பகம், ஒரொருதுறையில் வல்லுநரான பழம்பெரும் புலவர் பலர்பால் நாம் காணும் பலவகைக்கவித்திறமும் ஒருங்கே இந்நூலாசிரியர்பாற் காணத்தக்ககருவியாய்விளங்குகிறது. இவற்றுள், திருப்பேரைக்கலம்பகம் தனியே அரும்பொருள்விளக்கமும், திருவரங்கச்சிலேடைமாலையும் தனிப்பாமஞ்சரியும் அவ்வச் செய்யுளின்கீழ்க் குறிப்புரையும், பலபெரியோருடைய நன்மதிப்புரை முதலியனவும் உடையனவாக நல்ல காகிதத்தில் திருத்தமாகவும் அழகாகவும் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றைத் தமிழுலகம் சுவைகொள்ளுமாறு அச்சிட்டுதவிய பெருமக்கள் பரோபகார சிந்தையும் தமிழ்ப்பற்றும் பாராட்டத்தக்கன. மேலும் ஐயங்காரவர்களால் இயற்றப்பட்டு இதுவரை வெளிவராதிருக்கும் பிரபந்தங்களெல்லாம் வெளிவருமாறு தமிழ்மக்கள் இவற்றை ஆதரித்து ஐயங்காரவர்களுக்கும் பதிப்பாளர்க்கும் ஊக்கமளிப்பார்களாக. திருப்பேரைக்கலம்பகம் விலை அணா 8. திருவரங்கச் சிலேடைமாலை விலை அணா-6. தனிப்பாமஞ்சரி விலை அணா 8. வேண்டுவோர், 'ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்காரவர்கள், (வானமாமலை மடம் ஆஸ்தானவித்வான்), தென்திருப்பேரை, திருநெல்வேலி ஜில்லா' என்ற விலாசமுடையவர்க்காவது, 'திரு. A. இராஜகோட்டியப்பபிள்ளை, தமிழ்ப்பண்டிதர், இராமமூர்த்திரோடு, விருதுநகர்' என்ற விலாசமுடையவர்க்காவது எழுதிப் பெறலாம்.

கடோற்கசன்:—இதோ நின்றுவிட்டேன்.

பீமசேனன்:—ஏன் அந்தணரைத் துன்புறுத்துகிறாய்?

ஸுதநக்ஷத்ரகீர்ணஸ்ய ஸத்காந்தஸ்ய ஸஹஸ்ய ச।
வ்ருத்தஸ்ய விப்ரசந்த்ரஸ்ய ஸ்வர்பாநுரிவாகத:॥

புதல்வர்களான நக்ஷத்திரங்களால் சூழப்பெற்றவரும், மனைவியாகிய நிலவுவெளிச்சத்துடன் கூடினவரும், வயதுமுதிர்ந்தவருமான அந்தணராகிய சந்திரனைப் பிடிக்க, ராகுபோல் வந்தனையே!

கடோற்கசன்:—ஆம், ராகுதான்.

பீமசேனன்:—ஆ!

நிவ்ருத்தவ்யவஹாரோயம் ஸதாசாரநயேஸ்ஸஹ।
ஸபுத்ரதாரோ மோக்தவ்யோ வ்ருத்தோ த்விஜஸத்தம:॥

வலிமையையிழந்து தன்கார்யங்களைக் கவனிக்கச்சக்தியற்றவரும் எவ்விதக்குற்றஞ்செய்யினும் வதைக்கத்தகாதவருமான அந்தணப்பெரியாரை மனைவி மக்களுடன் விட்டுவிடுவாயாக.

கடோற்கசன்:—விடமாட்டேன்.

பீமசேனன்:—(தனக்குள்) ஓ! இவன் யாருடையபுதல்வனாயிருக்கக்கூடும்.

ப்ராத்ரூணாம் ஸர்வேஷாம் கோயம் ஹி குணதஸ்கர:।
த்ருஷ்ட்வா தஸ்ய ஸௌண்டீர்யம் ஸௌபத்ரஸ்ய ஸ்மராம்யஹம்॥

என்சகோதரர்களனைவருடைய குணங்களையும் களவுசெய்தவனான இவன் யார்? இச்சிறுவனுடைய சாமர்த்தியத்தை நோக்குமிடத்துச் சுபத்திரையின்புதல்வனான அபிமன்யுவின் நினைவு எனக்கு வருகிறது!

(வெளிப்படையாக) ஓ! புருஷ! விட்டுவிடு.

கடோற்கசன்:—விடமாட்டேன்.

முச்யதாமிதி விஸ்பஷ்டம் ஸ ப்ரவீதி யதி மே பிதா ।
ந முச்யதே ததாப்யேஷ க்ருஹீதோ மாதுராஜ்ஞயா ॥

என் தகப்பன் அன்புடன் என்னிடம் "நீ விட்டுவிடு" என்று சொன்னாலும், என் அன்னையின் ஆணையால் பிடிக்கப்பட்ட இவரை நான் விடமாட்டேன்.

பீமசேனன்:—(தனக்குள்) தாயின் உத்திரவு எப்படி? ஆ! பெரியோர்பணிசெய்வதில் ஆசையுள்ள தார்மிகன் இவன்.

மாதா கில மநுஷ்யாணாம் தைவதாநாம் ச தைவதம் ।
மாதுராஜ்ஞாம் புரஸ்க்ருத்ய வயமேதாம் தஶாம் கதா: ॥

மனிதர்களுக்குத் தாயே தெய்வங்களுக்குள்தெய்வம் (அன்னையைக்காட்டிலும் மேலானதெய்வம் இல்லை). நாங்கள் எங்கள் தாயின் ஆணையால் இவ்விதமான நிலைமையை அடைந்திருக்கிறோம். (வெளிப்படையாய்) ஓ! புருஷ! உன்னைக்கேட்கவேண்டிய சில உண்டு.

கடோற்கசன்:—விரைந்து சொல்லுவீர்களாக.

பீமசேனன்:—உன் தாயின்பெயர் என்னவோ!

கடோற்கசன்:—கேட்கலாம். ஹிடிம்பையென்ற ராக்ஷஸி.

கௌரவ்யகுலதீபேந பாண்டவேந மஹாத்மநா ।
ஸநாதா ஸா மஹாபாகா பூர்ணேந்துநேவ த்யௌரிவாம்பரா ॥

பூரணசந்திரனைத் தலைவனாகப்பெற்று ஆகாயம் விளங்குவது போல், பாக்கியவதியான அந்த அம்மாள், குருகுலத்துக்கு விளக்குப் போன்றவரும் பாண்டுவின் புதல்வருமான மகாத்மாவை நாயகனாகப்பெற்று விளங்குகிறாள்.

பீமசேனன்:—(தனக்குள்) ஆ! ஹிடிம்பையின் புதல்வனா இவன்? அவனுக்கு இவ்வளவுகர்வம் தகுதியானதே!

ரூபம் ஸத்வம் பலஞ்சைவ பித்ருஸாத்ருஶ்யஸம்பவம் ।
வ்யாஜாவதீர்ணகாருண்யம் மந்யே ஸ்வாஸ்யகீர்த்யஶம் ॥

இவன், யுதிஷ்டிரர் முதலியவர்களைப்போல் உருவம் தைரியம் தேகவலிமை என்னும் இவைகளையுடையவனே; ஆனால், ஜநங்களிடம் இரக்கமில்லாத இவன் மனம்மட்டும் அவர்கள் மனம்போல் இருக்கவில்லையே! (வெளிப்படையாய்) ஓ! புருஷ! அவர்களை விட்டுவிடு.

கடோற்கசன்:—விடமுடியாது.

பீமசேனன்:—ஓ! அந்தணரே! உம்முடைய புதல்வனைக் கூட்டிக்கொண்டுபோகலாம். நாம் இவனைத் தொடர்ந்துசெல்வோம்.

நடுவன்:—தாங்கள் அவ்வாறு செய்யக்கூடாது.

த்யக்தா: ப்ராகேவ மே ப்ராணா:
குரூணாம் ப்ராணரக்ஷயா ।
யுவா ச ஸத்குணோபேதோ
பவாம்ஸ்திஷ்டது ஶாஶ்வதம் ॥

பெரியோர்களின் உயிரைக் காப்பதற்காக என் உயிரை முன்னமே நான் விட்டுவிட்டேன்; யுவபுருஷராயும் நற்குணங்கள் வாய்ந்தவராயுமுள்ள நீர் பூமியில் வெகுகாலம் வாழ்ந்திருக்க வேண்டும்.

பீமசேனன்:—ஐயா! அது ஒழுங்கன்று. நான் அரசர்குலத்தில் பிறந்தவன். பிராமணர்கள் மிகவும் பூஜிக்கத்தகுந்தவர்களல்லரா? ஆதலால் என்சரீரத்தால் பிராமணசரீரத்தை மாற்றிக் கொள்ளவிரும்புகிறேன்.

கடோற்கசன்:—சரி: இவர் க்ஷத்திரியரா? அதனால்தான் கர்வம். இருக்கட்டும். இவரையே பிடித்துக்கொண்டுபோகிறேன். அந்தணச்சிறுவனை யார்தடுத்தது?

பீமசேனன்:—நானே.

கடோற்கசன்:—தாங்களா?

பீமசேனன்:—ஆம்.

கடோற்கசன்:—ஆதலால் தாங்களே என்னுடன் வருவீர்களாக.

பீமசேனன்:—நான் வரமாட்டேன். உனக்கு வலிமையிருந்தால் என்னை வலிந்து கொண்டுபோவாயாக.

கடோற்கசன்:—தாங்கள் என்னை யார் என்று அறிந்து கொண்டீர்களா ?

பீமசேனன்:—என்புதல்வனெனத் தெரிந்துகொண்டேன்.

கடோற்கசன்:—நான் எவ்விதம் உம்முடைய புதல்வனுவேன் ?

பீமசேனன்:—கோபித்துக்கொள்ளவேண்டாம். மன்னிப்பாயாக. பிரஜைகளையெல்லாம் க்ஷத்திரியர்கள் புத்திரர்களென்று கூறுவார்கள்; ஆதலால் நான் உன்னை அவ்வாறு கூறினேன்.

கடோற்கசன்:—பயந்தவர்கள் ஆயுதம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

பீமசேனன்:—

ஸாதோ ஶபே ஸத்ய ந பயம் ந ஜானே
ஜ்ஞாதும் ததிச்சாமி பவத்ஸமீபே ।
கிம்ரூபமேதத் பத்ர! தஸ்ய
ஜ்ஞானாஜ்ஞானஜ்ஞ: ஸத்ருஶம் ப்ரவக்து ॥

நல்லோனே ! உண்மையாகச் சூளுறவுசெய்கிறேன். அச்சம் என்ற பொருளை நான் அறியேன். அதை உன்னிடம் அறிய விரும்புகிறேன். பயம் என்று நீ சொல்வதால், நீ அறிந்திருப்பாயென்று நினைக்கிறேன். அது எவ்விதமானது ? சொல்லுவாயாக.

கடோற்கசன்:—நான் தங்களுக்கு அச்சம் இதுவென்று விளக்கிக்காட்டுகிறேன். ஆயுதத்தை யெடுத்துக்கொள்ளலாம்.

பீமசேனன்:—ஆயுதமா ? அதை யெடுத்துக்கொண்டாய் விட்டது.

கடோற்கசன்:—அது எப்படி?

பீமசேனன்:—

காஞ்சனஸ்தம்பஸத்ருஶோ ரிபூணாம் நிக்ரஹோத்ஸுக: ।
ஸ்வயம் து தக்ஷிணோ பாஹுராயுதம் ஸத்ருஶம் மம ॥

பொற்றூண்போன்றதும், பகைவர்களை அடக்குவதில் ஆசையுள்ளதுமான எனது வலக்கையே எனக்குத் தகுந்த ஆயுதம்.

கடோற்கசன்:—என்பிதாவான பீமசேனருக்குமட்டும் இது தகுந்தது.

பீமசேனன்:—பீமன் என்பவன் யார்?

விஶ்வகர்தா ஶிவ: க்ருஷ்ண: ஶக்ர: ஶக்திதரோ யம: ।
ஏதேஷ்வந்யதமம் புத்ர! கேந தே ஸத்ருஶ: பிதா ॥

குழந்தாய்! உலகத்தைப்படைத்தவர், பரமசிவன், ஸ்ரீ கண்ணன், இந்திரன், முருகன், யமன்: இவர்களுள் உன் தந்தை யாரையொத்தவன்?

கடோற்கசன்:—எல்லாருக்கும் சமமானவர்.

பீமசேனன்:—சே! இது பொய்யே.

கடோற்கசன்:—எப்படி? எப்படி? பொய்யென்று சொல்லுகிறுய். என் அப்பனை இகழ்கின்றுய். இருக்கட்டும். இந்தப் பெரிய மரத்தைப் பிடுங்கிக்கொண்டு அடிக்கிறேன். (மரத்தைப் பிடுங்கி அடித்து) இந்த அடியினுலும் இவனைக் கொல்லமுடியவில்லையே! நான் என்செய்வேன். இருக்கட்டும், கண்டுகொண்டேன்; இந்த மலைச்சிகரத்தைப் பிடுங்கிக்கொண்டு தாக்குகிறேன்.

ஶைலஶ்ருங்கம் மயா க்ஷிப்தம் ப்ராணநாஶாய பவிஷ்யதி ।

என்னுல் எறியப்பெற்ற மலைச்சிகரம் உனது உயிரைக் கொண்டுபோய்விடும்.

பீமசேனன்:—

[illegible]
[illegible]

வனத்தில் பிறந்த யானைக்குச் சினம்வந்தாலும் அது புலியைத் தாக்குமா?

கடோற்கசன்: — (அடித்து) இதனாலும் இவன் கொல்லப்படவில்லையே! நான் என்னசெய்வேன்! இருக்கட்டும், தெரிந்தது;

[illegible]
[illegible]

நான் வாயுபகவானுடைய பேரனும் பீமசேனருடைய புதல்வனுமல்லனோ? ஆயத்தமாகச் சற்று நில்லும்; முஷ்டியுத்தத்தில் எனக்குச் சமமானவன் ஒருவனும் இல்லை.

(இவ்விதமாக இருவரும் முஷ்டியுத்தம் செய்தல்.)

கடோற்கசன்:—(பீமசேனனைக் கட்டி)

[illegible]
[illegible]

வலிய கயிறுகளால் இறுகக்கட்டப்பட்ட யானையைப்போல் என்கைகளால் இறுகக்கட்டப்பட்ட நீ எப்படி வெளியேறுவாய்?

பீமசேனன்: — (தனக்குள்) ஹே! துர்யோதனனே! உன் எதிரிகளின்கட்சி வலுக்கிறது. அதற்குத் தகுந்த உபாயத்தைத் தேடிக்கொள்.

(வெளிப்படையாக) பிள்ளாய்! ஜாக்கிரதையாக இருப்பாயாக.

கடோற்கசன்:—ஜாக்கிரதையாக இருக்கிறேன்.

பீமசேனன்:—(கடோற்கசன்கைக்கட்டை உதறித்தள்ளி)

[illegible]
[illegible]

ஹே! வீரனே! உனக்கு அதிகபலமிருக்கிறதென்ற திமிரை விட்டுவிடு; உன் வலியை நான் அறிந்துகொண்டேன். கைச்சண்டையில் எனக்கு ஒருசிரமமும் இல்லையல்லவா?

கடோற்கசன்:— இதனாலும் இவனைக் கொல்ல இயலவில்லை. நான் என்செய்வேன்? இருக்கட்டும் தெரிந்தது. என் அன்னையின் அருளால் கிடைக்கப்பெற்ற மாயமான கயிறு இருக்கிறது. அதனால் இவனைக் கட்டிக்கொண்டுபோவேன். ஓ! மலையே! ஜலம் கொணர்வாய். ஆ! ஜலம் வழிகிறது. (ஆசமனம் செய்து மந்திரத்தை ஜபித்து) ஓ! புருஷனே!

[illegible]
[illegible]

நீ மாயக்கயிற்றினால் கட்டப்பட்டுத் தானாக நகரமுடியாமல் உத்ஸவங்களிற் கயிறுகளாற் கட்டப்பட்டதான * இந்திரத்வஜம் போல் விளங்குவாய்.

(என்று கடோற்கசன் மாயையால் பீமசேனனைக் கட்டுதல்.)

பீமசேனன்:—என்ன? மாயக்கயிற்றினால் கட்டுப்பட்டுவிட்டேனே! இப்பொழுது என்னசெய்வேன்! மகேசுவரனின் பிரஸாதத்தால் கிடைத்ததும் மாயாபாசத்தை அறுக்கவல்லதுமான மந்திரம் இருக்கிறது. அதை ஜபிக்கிறேன். ஜலம் எங்கு கிடைக்கும்? இருக்கட்டும். ஓ! பிராமணகுமார! உனது கமண்டலத்திலிருக்கிற ஜலத்தைக் கொண்டுவா.

பெரியார்:—இதோ ஜலம்.

(பீமசேனன், அந்த நீரினால் ஆசமனஞ்செய்து மாயையை விலக்கிவிடுதல்.)

கடோற்கசன்:—ஓ! கயிறு விழுந்துவிட்டதே!.

நான் இனி என்னசெய்வேன்! ஓ! புருஷரே! தாங்கள் முன்பு (பிராமணச்சிறுவனுக்குப் பதிலாகத் தாங்களே வருவதாக) வாக்குறுதிசெய்ததை நினைத்துக்கொள்ளுங்கள்.

---

* மழை பொழிவதற்காக உயர்ந்ததான இந்திரத்வஜம் கட்டுவது, தொன்றுதொட்டு வழக்கம்.

பீமசேனன்:—சரியான சமயம். எனக்கு இப்பொழுது நினைவு வந்தது. முன்னே செல்லுவாயாக.

(இருவரும் செல்லுதல்.)

பெரியார்:— பிள்ளைகாள்! பீமசேனன் போகிறானே! நாம் என்செய்வோம்?

ஆக்ருஷ்டாகஷவஹிஜ்ஜஷ்டாருா ருா ரெவ
ரொருணபாஹாபஹுவீய ஹாணெ நயாகூ,
வனஷ்வூபாதிஸ நசெகொரவயூ ரெய ஸீவ
ஸரவஸாரவஷ்ஹிவெ ராவூஷஸ: ஸஜீஞ: ॥

பொலிந்து விளங்கும் உக்கிரரூபத்துடன்கூடினவனையும், கைவலிமைவாய்ந்தவனையுமுள்ள அரக்கனைப் பொருட்படுத்தாது, மழைபெய்யும்போது அதைப் பாராட்டாமல் தன் கொம்புகளால் விலக்கிக்கொண்டு உல்லாசமாகச்செல்லுகிற எருதைப்போல் நடக்கின்றானே!

கடோற்கசன்:—இங்கே நில்லுங்கள். தங்கள்வரவை என் அன்னையாரிடம் தெரிவிக்கிறேன்.

பீமசேனன்:—நல்லது; அப்படியே செய்.

கடோற்கசன்:—(தாயை அணுகி) அம்மா! கடோற்கசனை நான் வணங்குகிறேன். வெகுகாலமாக நம்மால் ஆகாரத்திற்காக விரும்பப்பட்ட ஒரு மனிதனைக் கொண்டுவந்தேன்.

ஹிடிம்பை:—(அரங்கத்தில் வந்து) குழந்தாய்! வெகுநாள் வாழ்வாயாக. எவ்விதமான மனிதனைக் கொணர்ந்தாய்?

கடோற்கசன்:—பார்வைக்கு மனிதனே; ஆயினும் ஆற்றலினால் அல்லன்.

ஹிடிம்பை:—பிராமணனோ?

கடோற்கசன்:—பார்ப்பனனல்லன்.

ஹிடிம்பை:—(அல்லது) கிழவனோ?

கடோற்கசன்:—கிழவனல்லன்.

ஹிடிம்பை:—குழந்தையா?

கடோற்கசன்:—குழந்தையல்லன்.

ஹிடிம்பை:—அப்படியானால் அவனை நான் பார்க்கிறேன்.

(இருவரும் போதல்.)

ஹிடிம்பை:—இந்தமனிதரைத்தான் கொணர்ந்தாயோ?

கடோற்கசன்:—அம்ம! இவர் யார்?

ஹிடிம்பை:—அறிவுகெட்டவனே! இவர் தெய்வமல்லரா?

கடோற்கசன்:—ஆ! யாருக்குத் தெய்வம்?

ஹிடிம்பை:—உனக்கும் எனக்குந்தான்.

கடோற்கசன்:—என்னகாரணம்?

ஹிடிம்பை:—இதுதான் காரணம்: (பீமசேனனை நோக்கி) *ஆர்யபுத்திரரே! வருக! வருக!

பீமசேனன்:—(உற்றுப்பார்த்து) இவள் யார்? ஓ! தேவி ஹிடிம்பையா?

அஹாகம்ஸ்ருஷ்டராஜ்யாநாம் ஸ்ரூதாம்ஹஹெநவெந।
ஜாதகாரண்யாசெவி! ஸஜஃவொநாஶிதஷ்யா॥

ஹே தேவியே! ராஜ்யமிழந்து, அடர்ந்த கானகத்தில் சுற்றித்திரிகிறவர்களான எங்களுடைய தாபம், இரக்கங்கொண்ட உன்னால் நாசஞ்செய்யப்பட்டது.

ஹிடிம்பையே! இது என்ன?

ஹிடிம்பை:—(பீமசேனன் காதில்) ஆர்யபுத்திரரே! இங்ஙனமே.

* ஆர்யபுத்திரர் என்பது பெண்டிர் கணவனையழைக்க வழங்கும் சொல்.

4

பீமசேனன்:—இவள் ஜாதியில் அரக்கி; ஆனால் நடக்கையில் அரக்கியல்லள்.

ஹிடிம்பை:—(கடோற்கசனை நோக்கி) வெறிபிடித்தவனே! உன் தகப்பனை வணங்குவாயாக.

கடோற்கசன்:—ஓ! அப்பா! திருதராஷ்டிரர்புதல்வர்களான காட்டுக்குக் காட்டுத்தீ போன்ற கடோற்கசனை நான் வணங்குகிறேன். குழந்தையாகிய எனது அறியாமையை மன்னிக்க வேண்டும்.

பீமசேனன்:—குழந்தாய்! வா. வா. நீசெய்தகாரியம் என் மனத்துக்கு உவந்ததே. (அவனைத் தழுவிக்கொண்டு) திருதராஷ்டிரரின் பிள்ளைகளாகிய கானகத்துக்குக் காட்டுத்தீப்போன்ற பிள்ளைகளைத் தந்தையரின் மனம் விரும்பிக்கொண்டிருக்கிறது; பிள்ளாய்! மிகவும் பலமும் பராக்கிரமமும் பொருந்தியவனாக இருக்கக்கடவாய்.

கடோற்கசன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

பெரியார்:—இந்தக் கடோற்கசன் பீமசேனன்புதல்வனா!

பீமசேனன்:—(கடோற்கசனை நோக்கி) இந்தப்பெரியோரான "கேசவதாசரை" வணங்குவாயாக.

கடோற்கசன்:—பகவானே! வணங்குகிறேன்.

பெரியார்:—தந்தையையொத்த குணமும் கீர்த்தியும் வாய்ந்தவனாக இருப்பாயாக.

கடோற்கசன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

பெரியார்:—ஓ! விருகோதரனே! என் குலத்தைக் காப்பாற்றி, உன்குலத்தையும் மேன்மைப்படுத்தினாய். நாங்கள் போகிறோம்.

பீமசேனன்:—

[illegible]
[illegible]

இந்த மங்களமெல்லாம் தங்கள் அநுக்கிரகத்தால் உண்டானது. எங்கள் ஆச்சிரமம் சற்றுத்தூரத்தில் இருக்கிறது. அங்கே இளைப்பாறிப் பிறகு போகலாம்.

பெரியார்:—எங்களுக்கு உயிரைக்கொடுத்ததால் போதுமான உபசாரஞ்செய்தாய்விட்டது. நாங்கள் செல்லுகிறோம்.

(மனைவி மக்களுடன் கேசவதாஸர் வெளியேசெல்லுதல்)

பீமசேனன்:—ஹிடிம்பையே! இங்கே வா. குழந்தாய்! கடோற்கச! இங்கே வா. பெரியோரான கேசவதாசரை ஆச்சிரமத்தின் வாயில்வரை வழியனுப்புவோமாக.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நதிகளுக்குச் சமுத்திரம் எவ்வாறு நாயகனோ, ஹோமத்திரவியங்களுக்கு அக்கினி எவ்வாறு எஜமானனோ, இந்திரியங்களுக்கு மனம் எவ்வாறு தலைமை வகிக்கிறதோ அவ்வாறே பகவான் உபேந்திரர் (விஷ்ணு) நமக்குப் பிரபுவாவர்.

(எல்லோரும் வெளியேறுதல்)

மத்யமவியாயோகம் முற்றிற்று.

உ

கடவுள் துணை

மத்யமவியாயோகம்

நியாயவாதியாகவும் இராமேசுவரம் தேவஸ்தானக்
கல்லூரி அத்தியக்ஷராகவும் இருந்த

ப்ருஹ்மஸ்ரீ

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி B.A., B.L.,

அவர்களால்

வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றது.

செந்தமிழ்ப் பிரசுரம்—௩௫

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

1937

விலை அணா 2

உ

முகவுரை.

செந்தமிழ்நேயர்களே! உலகப்பிரசித்திபெற்றவராயும், வெகு காலத்துக்குமுன் விளங்கியவராயுமுள்ள பாஸகவியால் இயற்றப் பெற்ற மத்யமவியாயோகம் என்ற ஒரு சிறு த்ருஶ்ய (திருசிய) காவ்யத்தைத் தங்களுடைய கைம்மலர்களில் அன்புடன் சமர்ப் பணம்செய்கிறேன். தாங்கள் இதைக் கருணையுடன் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

பாஸகவி, கவிச்சக்ரவர்த்தி காளிதாஸருக்கு வெகு காலத்துக்குமுன் இருந்தவரும் அவரால் நன்கு பாராட்டப்பெற்ற வருமாவர். காளிதாஸர் தம்முடைய "மாளவிகாக்நிமித்ரம்" என்ற நாடகத்தின் முன்னுரையில், "உயர்ந்த புகழ்வாய்ந்தவர்களான பாஸர் ஸௌமில்லர் கவிபுத்ரர்: இவர்களின் கிரந்தங்களை விட்டுவிட்டுத் தற்காலத்துக்கவியான காளிதாஸன்செய்யுட் களில் ஏன் அபிமானம்வைக்கப்பெற்றது" என்று கூறியிருக்கிறார். மேலும் காளிதாஸர், தம்முடைய நாடகங்களில் பல இடங்களில் பாஸகவியின் நடையைத் தழுவியிருப்பதாகத் தெரிகிறது. பாஸ கவியின் நடை மிகத் தெள்ளிது; சுவைமிகுந்தது. அவரால் உப யோகிக்கப்பெற்ற உவமைகள் மிகச் சிறந்தவை.

இதுவரை, அவரால் இயற்றப்பெற்ற த்ருஶ்ய (திருசிய)காவியங் கள் பதின்மூன்று, திருவநந்தபுரம் ஸம்ஸ்கிருதவரிசையில் அச்சி யற்றப்பெற்று வெளிவந்துள்ளன. 'பாஸர் என்று ஒருகவி இருந்ததேயில்லை. அநேகர்கள் கூடி இவற்றை இயற்றியிருக்கக் கூடும்' என்று பலவிதமான ஆக்ஷேபங்கள் உண்டாயின. அவற்றுக் குத் திருவநந்தபுரம், Sanscrit curator, ப்ரும்மஸ்ரீ, மகாமகோபாத் யாய, கணபதிசாஸ்திரியாரவர்கள் தகுந்த சமாதானம் கூறியிருக் கிறார்கள். பாஸகவியென்று ஒருவர் இருந்து, அவராலே இக் காவ்யங்கள் இயற்றப்பெற்றன என்பதை, ஆங்கிலதேயத்திலும்

அமெரிக்காநாட்டிலும் உள்ள ஸம்ஸ்கிருதபண்டிதர்கள் ஆக்ஷேப சமாதானங்களைப் பரிசீலனைசெய்து, ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

வடமொழியில் 𑌶𑍍𑌰𑌾𑌵𑍍𑌯 (சிராவ்ய) காவ்யம் அதாவது காதுகளால் கேட்டு ஆநந்திக்கத்தக்க காவ்யம், 𑌦𑍃𑌶𑍍𑌯 (திருசிய) காவ்யம், அதாவது கண்களாற்கண்டு களிக்கத்தக்க காவ்யம் என்று காவ்யங்கள் இருவகைப்படும்.

𑌶𑍍𑌰𑌾𑌵𑍍𑌯 (சிராவ்ய) காவ்யங்களில், 𑌖𑌣𑍍𑌡 (கண்ட) காவ்யம் என்றும், 𑌲𑌘𑍁 (லகு) காவ்யம் என்றும், மஹாகாவ்யம் என்றும், 𑌚𑌂𑌪𑍂 (சம்பூ) என்றும் பலவகை உண்டு.

𑌦𑍃𑌶𑍍𑌯 (திருசிய) காவ்யங்களில் ரூபகம் என்று பத்துவகையும், உபரூபகம் என்று வேறு பத்துவகையும் உண்டு.

ரூபகங்களில் முக்கியமானவை நாடகம் பிரகரணம் என்பனவே. அவற்றுள்ளும் நாடகங்களே அதிகமாகக் காணப்பெறும். அவற்றில் காளிதாஸரால் இயற்றப்பெற்ற சாகுந்தளம் முதலிய மூன்றுநாடகங்களும், பவபூதி இயற்றிய உத்தரராமசரிதமும் பெயர்பெற்றவை.

பிரகரணவகையில் சூத்திரககவி இயற்றிய மிருச்சகடிகையும், பவபூதி இயற்றிய மாலதீமாதவமுமே முக்கியமானவை.

தசரூபகங்களில் இன்ன இன்ன ரூபகங்களுக்கு இன்னாரின்னார் நாயகர் என்றும், அவற்றுள் இன்னஇன்ன ரஸங்கள் அமைந்திருக்கவேண்டுமென்றும் விதிகளுண்டு. மேலும் பல வேறுவகையான கோட்பாடுகளும் உண்டு. விரிவஞ்சி அவற்றை இம்முகவுரையில் விவரிக்கவில்லை.

இப்பொழுது மொழிபெயர்க்கப்பெற்ற திருசியகாவ்யம் 'வியாயோகம்' என்பது.

அதன் இலக்கணம் சுருக்கமாக எடுத்து உரைக்கப்படும். இதில் வர்ணிக்கப்பெறும் நிகழ்ச்சி பிரசித்தமானதோர் கதையைத்தழுவியதாய் இருக்கவேண்டும்; அதில் தோன்றுகிற பாத்திரங்கள் (Dramatic Personae) மிகவும் கெம்பீரமானவர்களும் தைரியம் வாய்ந்தவர்களுமாயிருக்கவேண்டும். "𑌗𑌰𑍍𑌭𑌸𑌂𑌧𑌿" (கருப்பசந்தி) "𑌵𑌿𑌮𑌰𑍍𑌶𑌸𑌂𑌧𑌿" (விமரிசஸந்தி) என்பவை அதில் இல்லை. டிமம் என்ற காவ்யத்தைப்போல் அதில் உயர்ந்ததான ரஸம் (=காவ்யச்சுவை) அமைந்திருக்கவேண்டும். பெண்பாலின் காரணமாக அதில் சண்டை நிகழக்கூடாது. பரசுராமனுக்கும் தசரதராமனுக்கும், ஜனகராஜன் வில்லைமுறித்ததற்காகப் போர் ஏற்பட்டதுபோல் வேறுகாரணமாகப் போர் நிகழவேண்டும். அது ஓரேபகலில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்ததாகவும், ஓரே அங்கம் (Act) உள்ளதாகவும், அதிற்காணும் பலநிகழ்ச்சிகளும் பல பாத்திரங்களால் நிகழ்த்தப்பெற்றனவாகவும் இருக்கவேண்டும்.

இவ்விலக்கணங்களெல்லாம் இச் சிறுகாவ்யத்தில் அமைந்திருக்கின்றனவென்பது, இதை முழுதும் படித்துப்பார்த்தபின் தெரியவரும்.

செந்தமிழ்நேயர்களுக்கு இது உவந்ததாக இருக்குமானால், பாஸகவியின் வேறு காவ்யங்களையும் எனக்குத் தெரிந்தமட்டில் மொழிபெயர்த்துச் செந்தமிழ் வாயிலாக வெளியிடுவேனென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

V. S. ராமஸ்வாமிசாஸ்த்ரீ.

வேறு.

1813 *கோதறவில் வாங்கி[1]யுதைக் குஞ்சரத்தாற் குஞ்சரத்தாற்
கேத [2]மிழைத் திட்ட விராவணியை யன்றுதவ
சாதனத்தாற் கொன்றபிரான் றம்முன்னைத் தம்முன்னைப்
பாதகந்தீ ரப் [3]பணிவார் பாதம் பணிவேனே. (அ0)

1814 *மன்னிலங்கே சன்முதலா மைந்தரையு மைந்தரையு
முன்னிலங்கொ ளாதபில முன்பரையு முன்பரையுந்
தன்னரறு வீந்தவரந் தாவுறவே தாவுறவே
யின்னுயிருண் டான்குணங்கற் றின்பம் பயின்றேனே.[4] ()

1815 *அந்த முதலா யமைந்தானை யெம்மனோர்
பந்த மறுத்தாள் பரனைச் சுமித்திரைதன்
மைந்தனொடுங் கான்போந்த மாதவனை மாதவனை
யெந்தையையல் லாதிறையுண் டென்றுவே யென்றுவே.()

1816 *காண்டகுபொற் பூமடந்தை நற்பாரி கண்ணன்பே
ராண்ட பழம்பதியு மந்தாம மந்தாமங்
கூண்டளிபண் பாடுதுழாய் கூராழி கைவலத்தே
பூண்டதவன் சீருளத்தே பூரியார் பூரியார். (அரு)

வேறு.

1817 *சக்கர நாகணைத் [5]தகைய வேதிய
சக்கர நாகணைத் [6]தகைய வேதிய
விக்கரைத் தென்குரு கூர்மன் னேமவா
விக்கரைத் தென்குரு கூர்மன் னேமவா. (அச)

வேறு.

1818 வாசவான் றருநிழற்கீ ழுயரயிரா
வதப்பிடர்மேல் வைகும் பான்மை
நேசவான் பதத்தினையும் பெருநரகென்
றிகழ்வதற்கு நிகழ்பே ரின்பத்

[பி-ம்.] [1] யுடக் குஞ்சரத்தாய். [2] மிழைத்த விராவணியை. [3] புகழ்வார் பாதம் பணிந்தேனே. மா. [4] இச்செய்யுளின் முதலடி மூன்றுமடியாகவும் இரண்டாமடி முதலடியாகவும், மூன்றுமடி இரண்டாமடியாகவும், மாறு ளலங்காரத்திற் காணப்படும். [5] தகைத்தலத்தின. [6] தகைத்தலத்தின. மா.

தேசவான் பதத்திருப்ப விரும்புமரும்
பெறலொருநாட் டிருவின் கேள்வா
கேசவா வெனக் கிடைப்பப் பிறர்பெயரொன்
புன்சுகத்தாற் கிளத்து மாறே. (அ௫)

1819 ஆரணா நிலையிறந்த பகிரண்ட
கோடிகளை யகத்திட் டோங்கும்
பூரணா செழும்பணையா விளந்தளிரிற்
பசுங்குழவிப் பூட்சி பூண்ட
காரணா காரியமா கியவுலகத்
துயிர்கடொறுங் காந்த செய்கை
நாரணா வினையேனை யடிமைகொளத்
துணிந்ததற்கென் னவிலு வேனே. (அ௬)

1820 ஏதவா வருணிலைமைத் தாங்கதைநீத்
தழிவிலதா மின்ப வீட்டின்
மீதவா வினையினைந்தோர்க் கிந்திரையா
ளொடுஞ்சிறந்தவ் வீடே நல்கிப்
பேதவான் பதம்விழைந்தோர்க் கவையளிப்போ
ரகத்திறையும் பிரிவி லாத
மாதவா மாயவா நினக்குதவும்
படிக்கொருகைம் மாறுண் டாமே. (அ௭)

1821 தூவிந்தா டரவிதழி புனைவேணிச்
சிவன்முதலாத் தூயோர் கேட்பான்
மாவிந்தா சலமெனவே பணைத்தகரி
மூலமெனா மம்மர் கூர்ந்தா
வாவிந்தா வந்தனென் றிடர்தவிர்த்தாய்
நினையடுக்கி யாயர் கோவே
கோவிந்தா கோவிந்தா வெனவுரைப்பார்
பெறுங்கதியைக் கூறொ ணாதே. (அஅ)

வேறு.

1822 முட்டுவார் புனல்பருகி யற்றைநா ளையிலகில
முற்றுநீ பெறுதியெனவே
மட்டுவார் மலரயனை மிக்கநா பியிலருளும்
வைப்புநீ யெனுமுதன்மையாற்
சிட்டராய் மறைமொழியி னுட்பமா முடிவுதெளி
சிற்குணா திகமுடையராய்
விட்டுவே யுனைநினைவு பெற்றுளார் பிறபொருளை
மெய்த்துவாழ் பவையுமுளவே. (அ௯)

வேறு.

1823 சதுமாமறை யுணராவொரு தனியாகியநீ
பொதுவாய்வினை பலவாகிலை புரிவாய்மையினாற்
கதுவாய்பட முதுநீர்கவர் கருமாமுகிலே
மதுசூதன நினையார்மதி கொடுசூழ்பவரே. (௯0)

வேறு.

1824 முருகிற்பொலிவான் முளரிப் பெருமான் முடியிற்புனலாரா
வொருவப் பெறுபா ருயிர்கட் குயிரா யுறவற் றுளனாவாய்
பொருவிற் கதைவாள் வளைசக் கரநீ புனையப் பகையாதே
திரிவிக்கிரமா மறையைத்தெளிவார் தெளிதற் கரியானே.()

வேறு.

1825 ஏமமே வியவகில பூதகோ டிகளகவு
மேகமா னுருவமுளநீ
பூமனா புகலிலனா வாயவா ருயிர்புகும்
பூதமே யுணர்வினுணரார்
சேமமா கியகுலிச பாணியோ டடர்பெருகு
தேவரா னவர்மகிழவே
வாமனா வெனவுருவ மானவாழ் வினையரிய
மாயையாய் மொழிவர்சிலரே. (௯௨)

வேறு.

1826 பூத மயம்புணர் பாக முணர்ந்துயிர்
போக முறும்படிவாழ்
பேத முணர்ந்துணர் வோடு கலந்துணர்
பேருணர் வென்பதையே
நாதன் மொழிந்தருள் வாய்மை தெளிந்தரு
ளுகரி கம்பொறைசால்
சீதர னென்றுனை நாடி யுணர்ந்தவர்
சீர்மை விளம்பரிதே. (௩௩)

வேறு.

1827 பொருணிலா துடனுமிள மையுநிலா தெனுமுணர்வு
புணர்கிலார் நிலைமை யெனவே
மருணிலா வியநிலையின் மறுகுவார் தமையுமொரு
மனுவெனு நினையும் வகையா
ரருணிலா வியதகிய ருபயபா துகைமுடியி
லணிகிலா ரமரர் தொழவாழ்
இருடிகே சனையும்வழி படுகிலார் பரமபத
மிவர்களோ பெறுவ ரினியே. (௩௪)

வேறு.

1828 பொற்பவோரறிவன்றியுமற்பநாணிலைதங்கிய
புற்குழுதறிவின்பொறைகூர்
கற்பகாலமுறும்பிரமற்குமேகமயம்பயில்
கத்தனுமிணையென்பதிலா
வற்புதாமறையும்புகழ்சிற்குணவுலகந்தொழு
மச்சுதாவெனநைந்தளிதோய்
பற்பநாபசெழுந்திருவுற்றமார்பநின்றெண்கழல்
பற்றுவாரைவணங்குவனே. (௩௫)

வேறு.

1829 தேமே வியமலர் வாழ்வா னெனமறை
தேர்வா னெனநிரைசார்
நாமா துறைதனி நாவா னெனவுறை
ஞானு திகனுமலாற்
பூமா துறைதிரு மார்பா நிலமகள்
பூமா னெனவருவாய்
தாமோதரவுனை யாமோ புலவர்க
டாமோ புகழ்வதுவே. (௩௬)

வேறு.

1830 பேர்பலவாய்த் திருவுருவம் பலவாய் காட்டும்
பெருவினைபற் பலவாகிப் பெருகும் வாசத்
தார்பலவா யூர்தியனம் புள்ளே றென்னத்
தகுபலவாய்த் தானமுமோர் மூன்றே யாகிக்
கார்பலவாய் மலைபலவாய்க் கடல்க ளேழாய்க்
கனல்புனல்மண் விண்கடுங்கா லான காட்சிப்
போர்பலவாந் திறந்தொலைத்த நேமி யானைப்
பொறையுடையோ னிறையுணர்வாற் புகழ்ந்த பொழ்தில். (௩௭)

வேறு.

1831 தினகரனெண் மதியோடு மிருபுடையும் வரமேனி
திகழ்கமல மலர்வேலையோர்
கனகவட வரைமீதி னுலகமெழில் பெறவீதி
கருதிவரு வதுபோலவே
தனதிகிரி வளைமாடு பொலியவவ யவவாழ்வு
தழையவுயர் கருடேசன்மேல்
வனசமலர் மகண்மார்பி னிலகநில மகடோளின்
மருவவவன் முனமேவினன். (௩௮)

1832 வரமருவு திருஞான மதலைவிழி களிகூர
மதுவொழுகு மலர்தூவியே
சிரமருவு காஞகி யரிகரிய தெனவோகை
சிவணுமுரை யொடுதாழவே
பிரமமுத லவர்காண மகரசல நிதியூடு
பெரியவிழி துயில்கூருமால்
பரமபத மிசையேத னருகுவளர் தமராய
பதவியரு ளியதாமதே. (கூகூ)

வேறு.

1833 வண்டி ருந்திமிர் கமலைநா யகன்பத மணந்தோன்
றெண்டி ருந்தவா றையுமிறை வளத்தையுந் துதித்துட்
கொண்டி ருந்தவத் தினர்நக ரினைவலங் கொளயாங்
கண்டி ருந்தவச் சலஞ்சலம் யாதெனக் கழறும். (க00)

பதினேழாவது:

தாந்தன்முத்திபெற்றசருக்கம் முற்றும்.

கஅ. சங்கன் முத்திபெற்ற சருக்கம்.

1834 சேடன் றரிமே தினியுட் கமலப்
பீடன் றருபீ டுடைவீ ரருண்மா
மூடம் பயின்முன் பருண்முன் பெனலாம்
வேடம் பயில்வா னொருவே டனுளான். (க)

1835 வேரிக் கமலத் தயன்வீ ரனெனப்
பாரித் தவர்தம் படிமங் கடொறும்
வாரித் திறலா னதையோர் வடிவம்
பூரித் தவனென் றுலகம் புகழ்வான். (உ)

1836 சிரமே தகுநன் செவிநா சிகண்வாய்
கரமே தகுகா லினெடுங் கதிகற்
றாமே தகுவெற் புறினைப் புளதாம்
வரமே தகுமெய் யொடுலா வருவான். (ங)

1837 ஊழ்நா டலுறு துயிருண் டுழனுள்
வாழ்நா ளனவே மகிழ்வான் முதுநீர்
சூழ்நா னிலமீ துயிர்துய்த் திலனேல்
வீழ்நா ளனவே விழியுந் துயிலான். (ச)

1838 *செங்கேழ் கிளர்வே ணியனு ணுருவிற்
பைங்கே ழுமையா ளொருபா கமெனச்
சங்கே தமடைந் தகிவன் சமரிற்
கிங்கே றுவனென் றெதிரெண் ணியதே. (ரு)

1839 இகனு டியெழுந் தெதிர்திக் கினையே
யகனு டியுயற் கரிதென் றரனுர்
குகனு றுமுகங் கொடுகோ னுறமான்
மகனுன் முகமா திரம்வைத் துறைவான். (சு)

1840 விளர்வா ரணவன் பிடர்மேல் வெறிவண்
டுளர்நாண் மலரைந் தருநீ ழலுலா
வளர்வாழ் வெவனு மெனவா சவனுந்
தளர்வான் விழிசந் ததமுந் துயிலான். (எ)

1841 படர்வா னவர்தா னவர்புண் படவே
யடலான் மிடலா லடுபோ ரொலியாற்
சுடர்கால் கனல்[1]கா லொடுபோர் சுலவுங்
கடல்கா ரெனநா வலர்கண் ணுறுவான். (அ)

1842 ஊழைப் புறனுந் துதவத் துறவோர்
பீழைப் படுபே துறல்கண் டிமையோர்
கோழைப் படுகண் கலுழ்நீர் குலவான்
மோழைப் படவீழ் வளறு முதுநீர். (கூ)

1843 தோலா திகலுட் டழலைச் சொரிகட்
காலா சையிலெண் கடவுட் கரிதம்
பாலா ருயிர்கொள் வனெனப் படைதொட்
டேலா வகைவன் பிறகிட் டனவே. (௧0)

1844 பற்பத் தியின்வா ணிலவும் பகர்வெஞ்
சொற்பத் தியினு ரழலுஞ் [2]சுழல்கட்
பொற்பத் தியினீள் வெயிலும் பொறைபெற்
றற்பத் தியதா யுடனின் றருகுவான். (௧௧)

1845 முதுகைக் கரிநன் முகனத் தனெனு
மதுகைச் சிவன்மன் களமுற் றதுதிண்
செதுகைக் கடுவே டுவன்வெஞ் சினநஞ்
சதுகைப் படின்வென் றடுமென் றதனுல். (௧௨)

1846 சூழிக் கரியொன் றுரிதோ லினன்வேள்
பூழிப் படுதீ பொழிகண் ணனெனப்
பாழித் தறுகட் படர்தீ யடல்கண்
டூழிக் கனல்வா ருதிபுக் கதுவே. (௧௩)

வேறு.

1847 புண்ணுறுங் கொழுங்குருதிச் சுடர்ப்படையு
மடுகளத்துப் போரே றன்ன
னண்ணார்தங் குடர்குழம்ப வயிரவழற்
பிழம்பெறியு நயனக் கூற்றும்

[பி-ம்.] [1] பா ரொடுகால் சுலவுங். சா. [2] சுடர்கட். சா.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1936-ஆம்௵ ஆகஸ்டுமாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1936 ஆகஸ்டு	வரவு 1935 ஆகஸ்டு	விவரம்	செலவு 1936 ஆகஸ்டு	செலவு 1935 ஆகஸ்டு
I GENERAL SECTION :			I GENERAL SECTION :		
(1) மாதச்சந்தாவகையில் அடியிற் கண்டபடி வரவு:—					
a. புதுக்கோட்டை ஸ்டேட்டிலிருந்து 1936-ம் ௵ ஆகஸ்டுமாதத்துக்கு ரூ 50			(1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	197 8 ...	
b. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களிடமிருந்து 1936-ஆம் ௵ ஜூன், ஜூலை மாசங்களுக்கு ரூ 20			(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	230	
c. செந்தமிழ்ப்பத்திராசிரியர் மகா-ள-ள-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்களிடமிருந்து 1936-ம் ௵ ஆகஸ்டுமாதத்துக்கு ரூ 10			(3) Stationery, contingencies வகையிற் செலவு ...	4 4 3	

d. மகா-ள-ள-ஸ்ரீ E. M. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களிடமிருந்து 1936-ம் வருஷ ஆகஸ்மோதத்துக்கு ரூ 10						
ஆக ரூ 90	90	...	...			
(2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டி வகையில் வரவு ...	437	10	9			
(3) சங்கக் காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30	...	...			
(4) Miscellaneous வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ ...	560	10	9	488	14	...

(4) தபால், தந்தி வகையிற்செலவு	7	...	...			
மொத்தம் ரூ	488	12	3	389	11	6

II Editorial Section :						
(1) செந்தமிழ்ச் சந்தாதார்களிடமிருந்து சந்தா வகையில் வரவு.	20	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	18	12	9			
(3) செந்தமிழ்ப் பழையபிரதி விற்றவகையில் வரவு ...	1	...	...			
மொத்தம் ரூ ...	39	12	9	58	1	9

II Editorial Section:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	170	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும்சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸிவகையிற் செலவு. ...	1	6	..			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி.	94	...	...			
பைண்டிங்கூலிவகையிற் செலவு.	6	...	..			
(4) தபால் தந்திவகையிற் செலவு						
மொத்தம் ரூ ...	271	6	..	250	14	8

III Press Section :						
(1) அச்சுக்கூலிவகையில் வரவு	82	...	...			
(2) பைண்டிங்கூலிவகையில் வரவு ...	12	...	...			
மொத்தம் ரூ ...	94	...	...	94	14	...

Press Section :						
(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	41	12	7			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	7	3	6			
மொத்தம் ரூ ...	49	...	1	51	12	5

ஆகமொத்தம் வரவு ரூ. ..	694	7	6	641	13	9	ஆக மொத்தம் செலவு ரூ.	809	2	4	692	6	7
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ..	1805	15	3	1369	7	6	மாதமுடிவில் மீதியிருப்பு ரூ. ...	*1691	4	5	1318	14	8
ஆகமொத்தம் ரூ. ...	2500	6	9	2011	5	3	ஆக மொத்தம் ரூ. ...	2500	6	9	2011	5	3

*By M. R. C. C. Bank
Pass Bk. in current
account Rs. 1651- 0- 0
Cash on hand Rs. 40- 4- 5

1691- 4- 5

குறிப்பு:—மேலேகண்ட கணக்கின்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 1691—4—5 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 25011—5—0, (2) ரூ. 1050—0—0; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 10000. (2) ரூ. 10000. (3) ரூ. 5000. [illegible] சேர்க்கப்பட்டுள்ள தொகை ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 4—9—'36.

LAKSHMINARAYANAN,
MANAGER, 2—9—'36.

59

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணநூல் (5) இனியநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	கேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமான விளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	[illegible]	0	3	0
20.	சரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மகீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
35.	*திருமந்திர நூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்)	1	0	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0

41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக் கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணு 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 33 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணு வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர். மானேஜர்.